தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

சைவசமய மரணக்கிரியை செய்முறைக் கையேடு

தொகுப்பாசிரியர்
வேலணையூர் பொன்னண்ணா
ஸ்தாபகர் காப்பாளர்

வெளியீடு
சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை
டென்மார்க்

உ

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

சைவசமய மரணக்கிரியை
செய்முறைக் கையேடு..

தொகுப்பாசிரியர்

வேலணையூர் பொன்னண்ணா
ஸ்தாபகர்-காப்பாளர்

வெளியீடு

சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை
டென்மார்க்

நூல் விபரப் பட்டியல்

நூலின் பெயர்	:	சைவசமய மரணக்கிரியை செய்முறை கையேடு...
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
நூல் அளவு	:	டெம்மி
பக்கங்கள்	:	68
அச்சகம்	:	சான்லாக்ஸ் பதிப்பகம் 61, 66 டி.பி.கே மெயின் ரோடு வசந்த நகர், மதுரை – 3

டாக்டர் வே. சங்கரநாராயணன்
மேனாள் முதல்வர்
கைலாஷ் மகளிர் கல்லூரி
சேலம் - 636 502
தமிழ் நாடு

2. 3. 2018

அணிந்துரை

மரணம்

மரணம் என்ற சொல் அச்சத்தையும், கவலையையும் தரும் ஒரு சொல்லாகவே மனித இனத்தில் இருந்து வருகிறது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், வாழ்க்கையில் மரணம் நிச்சயம் ஒரு நாள் வரும். அதிலிருந்து எவரும் தப்பி விட இயலாது. இறப்புத்தான் எல்லா பயங்களுக்கும் அடிப்படை. இறப்பு இல்லையென்றால் பயம் என்பது இருக்காது. மரணத்தைப் பற்றிய தெளிவின்மையே இப்பயத்திற்குக் காரணம்.

மரணம் என்பது ஒரு அற்புதமான விஷயம். பல விஷயங்களை அது முடிவுக்கு கொண்டு வருகிறது. தற்போது நாமிருக்கும் நிலையில் அதை ஒரு கொடுமையான விஷயமாக நாம் நினைக்கலாம். ஆனால் 1000 ஆண்டுகள் வாழக்கூடிய நிலையில் நீங்கள் இருந்தால் மரணத்தை ஒரு விடுதலையாகத்தான் நினைப்பீர்கள். நீங்கள் நீண்ட காலம் இங்கே இருந்தீர்கள் என்றால் நீங்கள் எப்பொழுது கிளம்புவீர்கள் என்று மற்றவர்கள் யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள். எந்த உறவும் இதற்கு விதிவிலக்கல்ல. அப்படியானால் அடுத்தவர்கள் இடையூறாக நினைக்கும் முன் நம் மரியாதையை நாம் காப்பாற்றிக் கொள்வதற்காகவே மரணம் நிகழ்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம். எனவே, மரணம் என்பது ஒரு மாபெரும் விடுதலை. அது அகால மரணமாக நிகழாத வரையில் நாம் அச்சமோ, கவலையோ கொள்ள வேண்டியதில்லை. உலகில் ஏதோ ஒன்றை உருவாக்கக்கூடிய, ஏதோ ஒன்றில் பங்களிக்கக்கூடிய, ஏதோ ஒன்றை நிகழச் செய்கின்ற திறனோடு இருக்கும் பொழுது நாம் இறந்து போக விரும்புவதில்லை. சரியான நேரத்தில் இறந்து

போக விரும்பினால் யோகப் பயிற்சிகள் மூலம் உங்கள் மரணம் எப்பொழுது நிகழ வேண்டும் என்பதை நீங்கள் நிர்ணயம் செய்து கொள்ளலாம். 10 கிலோ உடல் எடை நம்மிடம் குறைகிறது என்றால் அதற்காக நாம் வருந்துவதோ, அழுவதோ கிடையாது. மாறாக மகிழ்ச்சியே அடைகிறோம். அப்படியானால் 50, 60 கிலோ எடை குறைவதற்காக ஏன் கவலைப் படவேண்டும்?

மரணம் உடலுக்குத்தானே தவிர ஆன்மாவுக்கு இல்லை. மானுடர் ஆன்மா மரணம் எய்தாது - மறுபடி பிறந்திருக்கும் என்பது தான் விதி - நமது சமயக் கொள்கை. கடவுளை போலவே உயிரும் அநாதிதான் - என்றும் இருப்பதுதான். மரணம் என்பது மறு சுழற்சி. இரவும் பகலும் மாறி மாறி வருவது போல, உறக்கமும் விழிப்பும் மாறி மாறி வருவது போல இறப்பும் பிறப்பும் இணை பிரியாது மாறி மாறி வரக்கூடியது என்பதை

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'

என்கிறார் திருவள்ளுவர். மரணம் ஒரு இயற்கையான நிகழ்வு என்று எடுத்துக் கொண்டால் மரண பயத்தை தவிர்க்கலாம். மரணம் மங்கலம் என்பதால்தான் திருமணத்திற்கு ஊதப்பட்ட சங்கு, வெற்றிக்கு ஊதப்பட்ட சங்கு, மரணத்திற்கும் ஊதப்பட்டது - மரணமும் மானுடத்தின் வெற்றிதான் - ஒரு வாழ்க்கை கடமைகளை வெற்றிகரமாக முடித்துவிட்டு அடுத்த வாழ்க்கை கடமைகளை முடிப்பதற்காகச் செல்லுகின்ற வெற்றிப் பயணம்தான் - செத்துப் போன பிணத்தருகே இனி சாகப்போகும் பிணங்கள் அழுவது வேடிக்கையாக இருக்கிறது என்றார் பட்டினத்தார்.

'செத்துக் கிடைக்கும் பிணத்தருகே இனி சாம் பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் கரியிலாபுரி காளத்தியே'

என்கிறார் பட்டினத்தார்.

எனவே, மரணச் சடங்குகளையும் ஒரு விடுதலை விழாவாக நாம் மேற்கொள்ள வேண்டும். நம் உறவினர் அல்லது நண்பரின் பிரிவு நமக்கு வேண்டுமானால் வேதனையைத் தரலாம். அனால், பிறவி என்னும் பெருந்துன்பத்தை விட்டுச் செல்லும் அந்த உயிருக்கு அது மகிழ்ச்சியான விஷயம்தானே! அப்படி எண்ணுகின்ற மனப் பக்குவத்தோடு மரணச் சடங்குகளை நாம் செய்யலாம். சைவம்

வினைப் பயனை நம்புகிறது. அவரவர் வினைகளுக்கு ஏற்ப அடுத்த பிறவி அமையும்.

'ஆன்மா அழியாதது என்றால், இறப்பிற்குப் பிறகும் அது வாழுகிறது என்றால் அது ஏன் நம்மிடம் பேசுவதில்லை? எல்லோரிடமும் பேசாவிட்டாலும், நெருங்கிய பாசத்துக்குரிய பெற்றோர், மனைவி அல்லது குழந்தைகளிடமாவது பேசலாமல்லவா?' என்று என்னிடம் ஒருவர் கேட்டார். ஆன்மாவுக்கு பேசும் ஆற்றல் உண்டா இல்லையா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். அப்படியே அது பேசும் வன்மை பெற்றிருந்தாலும் அதனால் பேச முடியாது என்பதை அவருக்கு நான் தெளிவு படுத்தினேன். இந்த உயிருக்கு எத்தனை பிறவிகள் உண்டென்று நமக்குத் தெரியாது - எல்லாமே மனிதப் பிறவியாக இல்லாவிட்டாலும், எல்லாப் பிறவிகளிலும் புதுப்புது உறவுகளும், சொந்தங்களும் உருவாகிக் கொண்டுதான் இருக்கும். நாயாக இருந்தாலும், நரியாக இருந்தாலும் அவைகளுக்கும் தாய் என்ற உறவாவது இருக்கத்தானே செய்யும்? அத்தனை உறவுகளோடும், அத்தனை பிறவிகளிலும் உறவாடிக் கொண்டே இருக்க முடியுமா? மேலும் ஆன்மா மரணத்தின்போது இந்தப் பற்றுக்களையெல்லாம் அறுத்துவிட்டுத்தான் செல்கிறது - அறுத்துவிட்டுத்தான் செல்ல முடியும்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு'

என்கிறது வள்ளுவம். பற்றுக்களைத் துறந்தால்தான் மற்றொரு பாதைக்கும், பயணத்திற்கும் வழி பிறக்கும். அதனால்தான் ஆன்மா மரணத்திற்குப் பிறகு நம்மோடு பேச வாய்ப்பில்லை.

ஏழு கொடிய பாவங்களுள் ஒன்றாக தற்கொலை கருதப்படுகிறது. தற்கொலையை எந்த மதமும், அங்கீகரிப்பதில்லை. 'சில நிமிடங்கள் சிந்தியுங்கள் - வாழ்க்கையை மாற்றுங்கள்' என்ற வேண்டுகோளோடு செப்டம்பர் 10ம் நாளை 'உலக தற்கொலை தடுப்பு தினமாக' கடைப்பிடிக்கிறார்கள். ஆண்டுதோறும் சுமார் 8.5 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். கல்வித் தோல்வி, வரதட்சணை, பாலியல், வறுமை, கடன், காதல் தோல்வி, பணித் தொந்தரவு இவைகள்தான் முக்கியக் காரணங்களாக

அமைகின்றன. பிரச்சனைகளை சந்திக்கும் பக்குவம் இருந்தால் தற்கொலையை தவிர்ப்பது எளிது. வாழ்க்கை வாழ்வதற்கே. இறைவன் கொடுத்த இந்த வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்துவிட வேண்டும். இடையில் முடித்துக்கொள்ள எவருக்கும் அதிகாரமில்லை. இருப்பினும் சிலர் தற்கொலை என்ற பெயரில் அதை செய்கிறார்கள். தற்கொலை என்பது மிகப் பெரிய பாவம். இறைவிதிக்கு முரண் பட்டது. அதைச் செய்வது தவறு. ஒரு வேளை அப்படி நிகழுமானால் அது அறியாமை வழிப் பட்டது - சிறு பிள்ளைத்தனமானது - சிறுவயதுக் குழந்தைகளை படிப்பதற்காகப் பள்ளியில் விட்டால் பாதியில் ஓடி வந்து விடுவதைப் போல. இருப்பினும் அந்த சிறுபிள்ளைத்தனத்தை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அப்படிப் பிரிகின்ற ஆன்மாவையும் முறைப்படி வழியனுப்பி வைப்பதுதான் முறை. மானுடச் சட்டையை உதறிய பிறகு எல்லா ஆன்மாவும் ஒரே நிலைக்கு உட்பட்டதுதான். எனவே, முறையான மரணச் சடங்குகள் மூலம் அறியாமை வழிப்பட்ட அந்த ஆன்மாவையும் நாம் அமைதிப் படுத்துவோம்.

நமது முன்னோர்கள் வகுத்து வைத்த அத்தனை சடங்குகளுக்கும் அர்த்தங்கள் உண்டு.

> **'காயமே இது பொய்யடா - வெறும் காற்றடைத்த பையடா**
> **மாயனார் தாம் குயவர் செய்த மண் பாண்டம் ஓடடா'**

என்ற சித்தர் வாக்குப்படி இந்த உடல் ஒரு மண் பாண்டம். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் விட்டு சீவன் சிவனை நோக்கி செல்கிறது என்பதை காட்டத்தான் சுடு காட்டில் மண் குடம் மூன்று முறை துளையிடப்பட்டு உடைக்கப் படுகிறது. பனிக்குடம் உடைந்து வாழ்வு தொடங்குகிறது. மண் குடம் உடைந்து வாழ்வு முடிகிறது.

திருமணத்தின் போது மூன்று முறை நெருப்பை நாம் வலம் வருகிறோம்.. வாழ்க்கை தொடங்குகிறது. இறப்பின் போது மூன்று முறை நெருப்பு நம்மை இடம் வருகிறது. வாழ்க்கை முடிகிறது.

ஈமக் கிரியைகளின் போது சிவபுராணம் படித்தாலும், திருப் பொற்சுண்ணம் இடித்தலும் நமது மரபு. இது தேவைதானா என்று

சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். பொற்சுண்ணம் இடித்தல் குறித்து சைவ சமயக் குரவர்களுள் ஒருவரான மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில் 20 பாடல்கள் பாடியுள்ளார். திருப்பொற்சுண்ணம் என்ற அந்தப் பகுதி சிவபெருமானை முதன்மைப் படுத்திப் பாடப் பெற்றது. மாணிக்கவாசகர் தில்லை செல்லும் வழியில் மகளிர் பொற்சுண்ணம் இடிப்பதையும், அப்போது களைப்புத் தோன்றாமல் இருக்க வாய்க்கு வந்த பாடல்களை பாடிக் கொண்டே இடிப்பதையும் பார்த்தார். அந்த தாள கதிக்கேற்ப இந்த 20 பாடல்களைப் பாடினார் என்று வாதவூரர் புராணம் (பாடல் 63) கூறுகிறது. பொற்சுண்ணம் என்பது பல்வேறு வாசனைப் பொருட்களை ஒன்று சேர்த்து இடிக்கப்படும் அழகிய வாசனைப் பொடி. இறைவனது அபிஷேகப் பொருளாகப் பயன்பட்ட பொற்சுண்ணம் கோவிலுக்குச் செல்லும் சைவப் பெருமக்கள் தலையிலும் தெளிக்கப்பட்டு வந்துள்ளது. மங்கள விழாக்களின் போதும் தெளிக்கப்பட்டு வந்துள்ளது. மரணமும் ஒரு மங்களம் என்பதால் இப் பொற்சுண்ணம் ஈமக் கிரியைகளின்போதும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. தமிழறிஞர் திரு அ.ச.ஞான சம்பந்தம் போன்ற சில அறிஞர்கள் இதைத் தவறு என்று கருதினாலும், சைவ சமய சித்தாந்தத்தின்படி இது சரியானதே. ஈற்றில் ஆத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்கிறது. 'சீவன் சிவன் என்றறி' என்ற யோகா சுவாமிகள் வாக்கும், சீவனுக்கும் சிவனுக்கும் உள்ள தொடர்பைக் கூறும் 'தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்' என்ற திருமூலரின் திருவாக்கும், ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை அறிவிக்கிறது. அதனால்தான் திருவாசகத்தை பாராயணம் செய்யும் யாழ்ப்பாணம் வாழ் சைவப் பெருமக்கள் வீட்டிலும், தென்பாண்டிச் சைவர்கள் வீட்டிலும், காலம் காலமாக இறப்பு வீட்டில் சிவபுராணம் படித்தலும், பொற்சுண்ணம் இடித்தலும் தொடர்ந்து கடைபிடிக்கப் படுகிறது. ஆன்மா சிவகதி அடையவேண்டும் என்பதே இதன் நோக்கம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மரணப் படுக்கையில் இருக்கும்போது திருவாசகத்தைப் பாடச் சொல்லிக் கேட்டிருக்கிறார். தமிழ் ஓலைச் சுவடிகளை சேகரிப்பதற்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்த டாக்டர் உ.வே. சாமிநாதய்யரும் தனது உயிர் பிரிகின்ற வேளையில்

திருவாசகத்தைப் பாடச் சொல்லிக் கேட்டிருக்கிறார். எனவே அந்த வழக்கத்தை நாமும் கடைப்பிடிப்பதில் தவறேதும் இல்லை.

டென்மார்க் சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை எளிய முறையில் சைவ மரணச் சடங்குகள் குறித்து வெளியிடும் இந்தக் கையேடு வெறும் சடங்குகளை மட்டுமல்லாது அதற்கான அர்த்தங்களையும், திருமுறைப் பாடல்களையும் இணைத்து வெளியிடுகிறது. முழுக்க முழுக்க இது சைவ நெறிகளுக்கு உட்பட்டது. டென்மார்க் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப சிற்சில மாற்றங்களோடு இக் கையேடு வெளி வருகிறது. தொகுப்பாசிரியர் அன்பிற்குரிய வேலணையூர் பொன்னண்ணாவின் பெருமுயற்சி கையேட்டின் வடிவமைப்பில் தெளிவாகத் தெரிகிறது. செய்வன திருந்தச் செய்ய வேண்டும் என்ற அவரின் ஆர்வம் பாராட்டுக்குரியது.

சைவப் பெருமக்கள் அனைவரும் இக்கையேட்டை பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும். இதன் நெறிமுறைகளை கடைப்பிடித்து வாழ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். மரணம் பற்றிய கவலையின்றி இறைவன் நமக்கு கொடுத்த இந்த வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள். வருவது வந்தே தீரும். வருவதை வரவேற்கத் தயாராகுவோம். வாழ்க்கை இனிமையாகும். வாழ்த்துக்கள்.

நன்றி! வணக்கம்!

2. 3. 2018 வே. சங்கரநாராயணன்

முன்னுரை

கி. செ. துரை 05. 03. 2018

டென்மார்க்கில் உள்ள தமிழ் வாழ்வு பெரிதும் கடமைப்பட்டுள்ள தமிழர்களில் முக்கியமான ஒருவர் யாரென்றால் நம்மில் பலர் வேலணையூர் பொன்னண்ணாவையே என்றும் முதலவாதாகக் கூறுவதுண்டு.

வயதுக்காக மட்டுமல்ல அவருடைய சேவைக்காகவும் அப்படிக் கூறினோம். மரணித்த மனிதர்களை வழியனுப்ப பல ஆண்டு காலமாக அவர் ஆற்றி வரும் சேவையை அத்தனை உயர்வாக மதித்தோம்.

டென்மார்க்கில் தமிழர்கள் குடியேறிய ஆரம்ப காலத்தில் முதலாவதாக எனது மாமனார் திரு. கு. வேலும்மயிலு அவர்கள் மரணித்துவிட்டார். சைவமும், பக்தியும், இறை நம்பிக்கையுடனும் வாழ்ந்த அவரை வழியனுப்பி வைக்க அந்த நேரம் பட்டவலி இன்றுவரை ஆறவில்லை. அதனால்தான் பொன்னண்ணாவின் அரும்பணியை இன்றுவரை போற்றுகிறேன்.

நல்லபடியாக இறுதிக் கிரியையை நடத்தி வைப்பார்கள் என நம்பி, தனது உடலை ஒப்படைத்து சென்ற ஒரு மனிதருக்கு விசுவாசமான காரியத்தை செய்வதில் இருந்த கஷ்டம் அன்றைய டென்மார்க்கில் பலத்த சிரமங்களைக் கொடுத்தது.

உயிரைப் பாதுகாக்க புலம் பெயர்ந்து வரும் ஒருவன் வந்த நாட்டில் தன் உயிர் போகுமென நினைத்து வருவதில்லை. இதனால் இறுதிக்கிரியைகளுக்கான ஆயத்தங்கள் புலம் பெயர் நாடுகளில் சிறப்பாக அமைக்கப்படவில்லை.

அதிகமான தமிழ் மக்கள் இருக்கும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் அது ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை. ஆனால் டென்மார்க் போன்ற சில ஆயிரம் மக்கள் இருக்கும் தமிழர் புதிதாகக் குடியேறிய நாடுகளிலோ அது பெரும் சிரமமாக இருந்தது.

இன்றும் ஆளில்லாத குறை நிலவுகிறது..

அன்று மரணத்திற்கு சுண்ணம் இடிக்க முதல் உரல், முதல் உலக்கை என்று எல்லாமே முதலாக செய்ய வேண்டியிருந்தது. உதவ வழி தெரியாது டேனிஸ் நகரசபையும் தடுமாறி நின்றது.

இந்த இக்கட்டான சூழலில் அந்தக் கடமையை நிறைவேற்ற முன்வந்தவரே நமது கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா. சைவத்தமிழ் பண்பாட்டு பேரவையை நிறுவி, நிறைவேற்ற ஆளில்லாத கடமையை முன்னெடுத்தார்.

ஏதோ ஓர் உந்துதல் - தொடங்கிவிட்டார் ஆனால் அதைத் தொடர்ந்து நடத்த முடியுமா என்று கேட்டார்கள். ஆனால் இரு தசாப்தம் கடந்தும் அவர் பணி தொடர்கிறது.

உண்மையில் இந்தப்பணியை தாயகத்தில் செய்வதைவிட புலம் பெயர்ந்த குளிர் மிக்க ஒரு நாட்டில் செய்வது மிகவும் கடினம். பனிக்காலத்தில் உயிரைப் பணயம் வைத்து பயணம் செய்து காரியத்தை முடிக்க வேண்டும்.

கிரியைகள் செய்யும் மண்டபங்களில் நிலவும் குளிரைத் தாங்கி, குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லி விடைபெற்றால் அதற்கு பரிசாக நோய்வாய்ப்பட நேரிடும். இப்படி நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி, மெய் வருத்தம் பாராமல் தன் கடமையை தான் பிறந்த சமுதாயத்திற்காக செய்த பொன்னண்ணா வெளியிடும் சிறிய கைநூல்தான் இது.

இதை ஏன் வெளியிடுகிறார்..

பொன்னண்ணாவிற்குப் பின்னர் அந்தப் பணியை செய்ய வசதியாக ஒரு வழிகாட்டி நூலை தயாரித்துக் கொடுத்தால் இனி வருவோர் அந்தப் பணியை முன்னெடுக்க வசதியாக இருக்குமல்லவா..?

அன்று புலம் பெயர்ந்து வந்தவர்கள் இரண்டொரு ஆண்டுகளில் போர் முடியும், தாயகம் திரும்பலாம் என்று கருதிய காலம் போய், முப்பதாண்டுகள் கழிந்துவிட்டன. இப்போது இந்தத் தேவையை பூர்த்தி செய்ய நிரந்தரமான ஏற்பாடுகள் அவசியம் என்ற தவிர்க்க முடியாத காலத்திற்குள் சமுதாயம் வந்துவிட்டது.

அந்தவகையில் வேலணையூர் பொன்னண்ணா எடுத்துள்ள முயற்சி பாராட்டுக்குரியது. வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கே இடமேது..?

வந்தவரை உயிரோடு அனுப்பி வைத்தான் ஆண்டவன். அவன் அனுப்பிய உடலை மரியாதையுடன் அனுப்பி வைக்க சீரான வழி காண்பதே ஓரினத்தின் பண்பாட்டின் உச்சமாகும். உயிருள்ள மனிதன் தனக்கு உயிர் இருப்பதால் பிழைத்துக் கொள்கிறான், உயிரை இழந்தவனுக்கு யார் இருக்கிறார்கள்..?

அவனை சுற்றிவர இருப்போரே அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும். மனிதர்கள் செய்ய வேண்டிய கடமைகளில் எல்லாம் மிகப்பெரிய கடமை அவன் வாழ்ந்து போன ஆலயமான உடலை அதி உயர் மரியாதை கொடுத்து அனுப்புவதுதான்.

இதற்காக பொன்னண்ணாவும் அவர் நண்பர்களும் இணைந்து ஆற்றிய, ஆற்றும் தொண்டுக்கு விலை இல்லை. இந்த நூல் அவர்கள் அரிய பணியை போற்றும்.

05. 03. 2018 கி. செ. துரை

என்னுரை

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க் 05. 03. 18

என் அன்புக்குரிய டென்மார்க் வாழ் சைவப் பெருமக்களை வணங்குகின்றேன்.

உங்களோடு ஒருசில நிடங்கள் பேச நினைக்கின்றேன். மனிதவாழ்வில் மரணம் என்பது நிச்சயமானது. அது நாம் என்று அன்னையின் பன்னீர்குடம் உடைத்து இந்த உலகில் விழுந்தோமோ அந்த நிமிடமே நாம் மரணிக்கும் நிமிடங்கள், இடம், விதம், நிர்ணயம் செய்யப்பட்டு விடுகிறது. இது இயற்கையின் செயல். படைத்து எம்மை இந்த பூமிக்கு அனுப்பிய இறைவனின் செயல். இதை எவராலும் மாற்ற முடியாது என்பதை நாம் மறந்து விட்டு இந்த உடம்பு, இந்த உயிர், இந்த வாழ்க்கை, பந்தம், பாசம், உறவு எல்லாம் நமது சொந்தமென நாம் எண்ணி வாழ்கின்றோம். இதை ஒருகணம் சிந்தித்தால் உண்மை விளங்கும்.

"மனிதன் நினைப்பதொன்று வாழ்வு நிலைக்குமென்று!
இறைவன் நினைப்பதொன்று பாவம் மனிதனென்று."

என்ற பாடலை கவிஞர் கண்ணதாசன் பாடி வைத்தார். அன்று நாம் அப்பாடலை சினிமா பாடல் என்று பாடிவிட்டு இருந்து விட்டோம். இப்போது அதன் கருத்தை ஆழ்ந்து சிந்திக்கும் போது தான் அந்தப் பாடலில் எத்துணை ஆழந்த அர்த்தம் உள்ளது என்பது தெரிகிறது.

அதன் அடிப்படையில் சிந்தித்தால் நாம் எடுத்து வந்த இந்த மனித வாழ்வை எமக்கு இறைவன் கொடுத்து இந்த மானிடப்

பிறவியை ஏன் கொடுத்தான்? என்ன தேவைக்காக கொடுத்தான்? என்று சிந்திக்கும்போது எமக்குள்ளேயே கேள்வி எழுகின்றது. நீ போய் மண்ணில் பிறந்து, வளர்ந்து, படித்து, பெரியவனாகி, திருமணமாகி, பிள்ளைகளை பெற்று, சுகமாக வாழ் என்றுதானா இறைவன் அனுப்பி வைத்தான்? இல்லை இல்லை. நீ போய் வாழ்வதோடு உன்னால் முடிந்தவரை மற்றவர்களுக்கும் எது உன்னால் செய்ய முடிமோ அதை மனதார உனது இனத்துக்கோ, உனது சமூகத்துக்கோ, செய்தால் தான் உனது வாழ்வில் நீ வாழ்ந்ததில், உன் சந்ததி வாழ்வதில் ஒரு அர்த்தம் உண்டு என்று அனுப்பிவைத்தார்.

ஆனால் நாம் அதை மறந்து விட்டு மற்றவர் வாழ்க்கை பற்றி குற்றம் கண்டு, கேலி பேசி, குடும்பம், பந்தம், பாசம், பணம், காசு, வீடு என எண்ணி வாழ்ந்து விட்டோம் என்பதே தெளிவாகின்றது.

இந்த நிலையில் தான் நான் அகதியாக 1987ம் ஆண்டு ஆடி மாதம் 20ம் தேதி பகல் 12 மணிக்கு டென்மார்க்கில் அடிபதித்து அகதி வாழ்வில் இணைந்து கொண்டேன். அந்த வாழ்க்கையின் அடித்தளத்தில், அந்த காலகட்டத்தில், எனது இனத்தின் அவலவாழ்வை, எமத மதத்தின் அவல நிலையை, எமது மக்களின் உதவிக்காக, வேலைக்காக, மதம் மாற்றும் செயல் பாடுகளையும் கண்டு வேதனையுற்று வாழும் நிலையில் எமது கிராமத்திலேயே ஒருவர் இறையடி சேர அவரை முறையாக வழியனுப்பி வைக்க அவரின் இறுதி மரியாதையை அவர் சார்ந்த மத முறைப்படி செய்ய ஆள்தேடி திரிந்தும் கிடைக்காத பட்சத்தில், அவரின் உறவுகளை தேடிச்சென்ற மாற்று மதக்காரர்கள் தாங்கள் பொறுப்பெடுத்து தங்கள் முறைப்படி ஆறுபேர் கூடி பைபிளை படித்து பயணம் அனுப்பி விட்டார்கள். அத்தோடு அந்த குடும்பத்தையே அடுத்த மூன்று மாத்துக்குள் மாதம் மாற்றி தங்கள் மதத்தில் சேர்த்துக் கொண்டார்கள். இதை அறிந்த, தெரிந்த என் இதயம், இப்படியே விட்டால் எமது மதத்தைக் காப்பது யார்? இனியும் நாம் இதற்காக செயல்படாது கண் மூடியிருந்தால் எமது மதத்தை நாம் அழிந்து போக விட்ட ஒரு சமூகமாகி விடுவோம் என்ற சிந்தனையில் சிந்திக்க தொடங்கிய ஒரு சில சமய உணர்வு கொண்ட சிலரால் அரம்பத்தில் தொடங்கப்பட்டதே பிள்ளையார் ஆலயம். அதன் செயலில் செயல்பட்டவர்களோடு செயல்பட்ட நானே ஏன் இந்த இறுதிக் கிரியை நாம் செய்யக் கூடாது என்று என்னை நான்

கேட்டதால் மனதில் எழுந்ததே இந்தப் பணி. இது 1997 முதல் 2018 இன்று வரை தொடர்கின்றது. இந்தப் பணியை அங்கமாய் வைத்து 2007ல் பில்லூாண்ட் நகரத்தில் அமைக்கப்பட்டது சைவத் தமிழ் பண்பாட்டுப் பேரவை. அதன் மூலமே இப்போது இப்பணி தொடர்கின்றது. இதை தொடர்கின்ற எனது உடல் நிலையும் பாதிப்படைகிறது. எனது வயதோ எண்பதை எட்டுகின்றது. இனி நான் தொடர்ந்து இப்பணியில் தொடர முடியுமோ என்ற நோக்கிலும், செய்முறை பற்றி தெரியாத நண்பர்கள் தெரிந்து கொள்ள கேட்ட முறையிலும், அவர்களின் விருப்புக்கிணங்கத் தான் இந்தக் கைநூலை அச்சிட்டுள்ளேன்.

கீழே எழுதப்படும் இந்த விளக்க நூலானது சைவ சமய இறுதிக் கிரியைகள் பற்றிய உரிய தத்துவார்த்தத்துக்கமைய எழுதப்பட்டிருந்தாலும், இதை எழுதியதனின் நோக்கம் புலம் பெயர்ந்து ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா அமெரிக்கா போன்ற பல நாடுகளில் வாழும் எமது புலம் பெயர்ந்த சைவ சமய தமிழ் உறவுகளுக்கு சில சமயங்களில் இறுதிச் சடங்குகள் செய்ய சைவ குருமார் இல்லாத நிலையில், சைவ, சிவ சிந்தனையாளர் சிலர் முன்வந்து இந்த கிரியைகளைச் செய்யும் போது, அப்படி செய்பவருக்கு ஒரு கையேடாக இது உதவலாம் என்ற ஓர் நல்ல நோக்கமேயாகும்.

குறிப்பாக தாயகத்தில் அல்லது தமிழகத்தில் உள்ள மயானத்தில் செய்யப்படும் செய்முறைகளை இந்த நாடுகளில் நாம் கைக் கொள்ள முடியாது. ஆனாலும் இறந்த ஆத்மாவுக்கு செய்ய வேண்டிய கடமைகளை, மரியாதையை பூரணமாக நிறைவேற்றும் வண்ணமும், வேதனையில் துடிக்கும் உறவுகளின் மன ஆறுதலுக்காகவும், இந்த நாடுகளின் சட்டதிட்டங்களை அனுசரித்து போகும் வகையிலும், சில நடைமுறைகள் இங்கு மாற்றப்பட்டு உள்ளன. இந்தக் கையேட்டைப் படிப்பவர்கள் என்னுரையில் கூறப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பதிப்பாசிரியர்

வேலணையூர் பொன்னண்ணா

டென்மார்க்

இறந்தவர்களுக்கு ஈமக்கிரியைகள் ஏன் செய்ய வேண்டும்?

இறந்தவர்களுக்குச் செய்யப்பட வேண்டிய இறுதிக்கிரியைகள் குறித்தும், அதற்கான விளக்கங்கள் குறித்தும் அறியப் புகுமுன், இறந்தவர்களுக்கு அச்சடங்குகள் ஏன் செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு விடை காண வேண்டியது அவசியம்.

இறப்பிற்குப் பின் செய்யப்படும் சடங்குகள் உடலைவிட்டு நீங்கிய உயிரை சொர்க்கத்தில் புகுவித்து கடவுளோடு சேர்த்து மீண்டும் பிறவா நிலை எய்தச் செய்யும் என்று சிலர் நம்புகிறார்கள். அது மூட நம்பிக்கை. அது போன்ற மூட நம்பிக்கைகளுக்கு சைவத்தில் இடமில்லை. உடலை விட்டுச் சென்ற உயிர் அதன் வினைக்கேற்ப வேறொரு உடலை எடுக்கும் என்றும் அதைக் கூட்டுவிப்பவன் இறைவன் என்றும் சைவம் தெளிவாக அறிவுறுத்துகிறது. அவரவர் செய்த வினைகளுக்குக்கான பலனை அவர்களே தான் அனுபவித்தாக வேண்டும். இந்த வினைக் கோட்பாடு சைவத்தின் உயிர் நாடி. அதை விட முக்கியம் உடலை விட்டு உயிர் பிரிந்த பிறகு நமது படையல்களை ஏற்பதற்கோ, நுகர்வதற்கோ அந்த உயிருக்கு எந்தப் பொறிகளும் கிடையாது – புலன்களும் கிடையாது. பூதவுடலை நீத்தவுடனேயே அந்த உயிருக்கான இவ்வுலகத் தொடர்புகள், பந்தபாசங்கள், அனைத்தும் அற்றுப் போய் விடுகின்றன.

பிறகு ஏன் இந்தச் சடங்குகளும், படையல்களும் என்ற கேள்வி எழுகிறது. தமிழர்கள் நன்றி உணர்வு மிக்கவர்கள். நாம் இந்த பூமிக்கு வருவதற்கும், வாழ்வதற்கும் வழிகாட்டிய தாய் தந்தையரை மறவாமல் அவர்களுக்கு நன்றி செலுத்துவது மிக முக்கியம். அதற்காகவே பெற்றோர் இறந்தவுடன் இக்கிரியைகளைக் செய்வதோடு, ஆண்டு தோறும் அவர்களை நன்றியோடு நினைவு கூறுவதற்காக திதியும் கொடுக்கின்ற வழக்கம் தமிழர்களிடம் தோன்றியது. இறந்தவர் பெயரால் நாம்

செய்கின்ற அன்னதானமும், தான தர்மங்களும், இறந்தவர்களை சொர்க்கத்தில் சேர்க்காது என்றாலும் அந்த ஆன்மா சாந்தி பெறவும், அடுத்த பிறவி நல்லதாக அமையவும் இறைவனை வேண்டுவது இக்கிரியைகளின் நோக்கம். அறிந்தே செய்கிற வினைகளின் பயனை ஒவ்வொருவரும் அனுபவித்தே ஆக வேண்டும். ஆனால் அறியாமல் செய்கின்ற வினைகளை பொறுத்தருளுமாறு பெற்றோர்களுக்காக பிள்ளைகள் இறைவனிடம் வேண்டுவதும் இக்கிரியைகளின் நோக்கம்.

உண்மையில் ஆன்மா சாந்தி பெற எண்ணுபவர்கள் அன்னதானம் செய்ய வேண்டும். இறந்தவர்களின் நல்ல விருப்பங்களை நிறைவேற்ற அவர்களின் நினைவு நாளில் உறுதி ஏற்க வேண்டும். அவர்கள் விட்டுச் சென்ற ஆன்மீக, சமுதாயக் கடமைகளை தொடர்ந்து ஆற்ற வேண்டும். இதைவிட ஒருவர் உயிரோடு வாழும் பொழுதே அவர்கள் மனம் புண்படாமல் அன்புடன் நடந்து கொள்வதே மிகச் சிறந்தது. ஒருவர் முதுமை அடையும் பொழுதோ, நோய்வாய்ப்படும் பொழுதோ, அவர் விருப்பத்தை நிறைவேற்றாது, சேவை செய்யத் தவறிவிட்டு, இறந்த பிறகு சடங்குகள் செய்வதில் பயனில்லை. படுக்கையில் கிடக்கும் பொழுது, தண்ணீர் கூடக் கொடுக்க முகம் சுளித்து விட்டு, இறந்த பிறகு அப்பாவுக்கு இது பிடிக்கும் - அம்மாவுக்கு இது பிடிக்கும் என்று படைக்கும் படையலால் என்ன பயன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே வாழும் போதே மூத்தோரை மதித்துப் போற்றுவோம். அவர்களிடம் அன்பு காட்டுவோம். இறப்பிற்குப் பின் ஈமக் கிரியைகள் மூலமாக அவர்களுக்கு நன்றி செலுத்துவோம். ஒவ்வொரு ஆண்டுத் திதியின் போதும் அவர்களது சேவைகளை நினைவு கூருவோம். அவர்கள் விட்டுச் சென்ற ஆக்கப் பூர்வமான பணிகளை என்றும் தொடர்வோம்.

1. கிரியைகள் ஆரம்பிக்கும் முன் தீபம் காட்டி மலர்தூவி துதித்தல் விநாயகர் வேண்டுதல்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம் கை.

அங்கமும் வேதமும் ஓதும் நாவர்
அந்தணர் நாளும் அடி பரவ
மங்குள் மதி தவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வம் மல்கு
சீர்கொள் செங்காட்டங் குடிய தனுள்
கங்குல் விளங்கெரி யேந்தி யாடுங்
கணபதியீச் சுரங் காமுகவே!

பேழை வயிற்றவனே போற்றி!
வேழ முகத்தவனே போற்றி!
பெருச்சாளி வாகனே போற்றி!
பேர்சக்திசிவன் பாலகனே போற்றி!
ஓம் கணபதி ஓம்! ஓம் கணபதி ஓம்! ஓம்!



2. மலர்தூவி
சிவன் வேண்டுதல் செய்தல்

பருவாய பிறப்பு அறவேண்டும்
பக்திமயம் பெற வேண்டும்
சீருருவான என் சிவபெருமானே..!
செங்க மலர் போன்றவனே....
என் ஆருயிரான ஆரமுதே..உன்
அடியவர் தொகை நடுவே
ஒரு உயர்வான உன்
திருவடியை வேண்டி!

உன்னை தேடிவரும் இந்த ஆத்மாவை
ஆட்கொண்டு அருள் தருவாயாக என்று
தயவாக இரங்கி உள்ளம் குழைந்து வேண்டுகின்றேன்
ஐயா! சாமியே சரணம்..

வேறாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி!
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கையிலை மலையானே போற்றி போற்றி!

பொறையுடை பூமிநீ ஆனாய் போற்றி
பூதப் படையாய் புனிதா போற்றி
நிறையுடை நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதென் உள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடை வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கும் குருவே போற்றி
ஜெயஜெய சங்கர சிவனே போற்றி
திருச்சிற்றம்பல நாயகா போற்றி
கறையுடை கண்டம் உடையாய் போற்றி
கையிலை மலையானே போற்றி போற்றி

ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய!! ஓம் நமசிவாய!!


சிவசிவ

3. மலர் தூவி கற்பூரதீபம் காட்டி சிவனை வேண்டுதல்

எல்லாம் வல்ல எம்பெருமானே! இந்த பூலோகத்தில் படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களையும் நீரே புரிகின்றீர் என நாங்கள் பூரணமாக நம்புகின்றோம். ஆகவே அம்மை அப்பராக இந்த கும்பத்தில் எழுந்தருளி அருள் புரிய வேண்டுமென அன்பினால் நம்பிக்கையோடு கரம் கூப்பி அகம் குழைந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றேன் ஐயா சிவனே!

இந்த உடலை விட்டு பிரிந்து, உனது பாதஅடி தேடிவந்த, இந்த ஆத்மாவை

நற்கதி அடைய வைக்கவென்று இந்த கிரியைகளை தொடங்குகின்றேன்.

இறந்தவரின் குடும்பத்தினரும், உற்றார், உறவினர், நண்பர்களும், சிந்திய விழிநீர் துடைத்து, துன்பத்தில் இருந்து மீண்டு தமது வழமையான நிலைக்கு திரும்ப வழிவகுக்க வேண்டுமென கெஞ்சி மன்றாடி வேண்டி நிற்கின்றேன் ஐயா அருள் புரிவீராக...! ஐயா அருள் புரிவீராக...!

ஓம் நமசிவாய.! ஓம் நமசிவாய!! ஓம் நமசிவாய!!!



உ

சிவாய நம ஓம் நமசி வாய நம ஓம்
ஓம் நமசி வாய நம ஓம், சிவாய நமஓம்
சிவாய சிவாய சிவாய நம ஓம்

விளக்கவுரை

கீழே எழுதப்படும் இந்த விளக்க நூல் ஆனது சைவ சமய இறுதிக் கிரியைகள் பற்றியது உரிய தத்துவாத்துதத்துக்கு அமைய எழுதப்பட்டிருந்தாலும் இதை எழுதியதன் நோக்கம், புலம் பெயர்ந்து ஐரோப்பா, கனடா அவுஸ்திரேலியா அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் எமது சைவ சமய தமிழ் உறவுகளுகக்கு சிலசமயங்களில் இறுதிச் சடங்குகள் செய்ய சைவ குருமார் இல்லாத நிலையில், சைவ சிவ சிந்தனையாளயர் சிலர் முன்வந்து இந்த கிரியைகைகளைச் செய்யலாம். அப்படி செய்பவருக்கு ஒரு கையேடாக இது உதவலாம் என்ற ஓர் நல்ல நோக்கமே.

குறிப்பாக தாயகத்தில் தமிழகத்தில் உள்ள மயானத்தில் செய்யப்படும் செய்முறைகள் இந்த நாடுகளில் நாம் கைக் கொள்ள முடியாது. ஆனாலும் இறந்த ஆத்மாவுக்கு செய்ய வேண்டிய கடமைகளை, பூரணமாக நிறைவேற்றும் வண்ணமும் இந்த நாடுகளின் சட்டதிட்டங்களை அனுசரித்து போவதற்காகவும், சில நடைமுறைகள் இங்கு மாற்றப்பட்டு உள்ளது. இந்த மலரை படிப்பவர்கள் இந்த முன்னுரையில் கூறப் பட்ட விடயங்களை கவனத்தில் எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

உயிர் பிரிகின்ற வேளையில் செய்ய வேண்டியன

உயிர் உடலை விட்டு பிரிகின்ற வேளையில் உடனிருக்கும் குடும்பத்தவர் அல்லது உறவினர்கள், அழுது குளறாமல், அமைதியாக இருந்து தேவார திருவாசகம் ஓதல். தொண்டை வறளாது இருப்பதற்காக பால் பருக்குதல், திருநீறு பூசுதல். உடலை விட்டு உயிர் பிரிகின்ற வேளையில் அதாவது. உடலின் ஐம் பொறிகளையும் விட்டு (மெய், வாய், கண், மூக்கு, செவி) எனும் புலன் ஐந்தும் அடங்கும் போது, உயிருக்கு தனியொரு அனுபவம் ஏற்படும் என்று நம்பப் படுகின்றது. இந்த வேளையில் அருகில் இருப்போர் அழுது கூச்சலிட்டால், உயிருக்கு தடுமாற்றமும் குப்பமும் ஏற்படும் என்று கருதப்படுகின்றது. இதற்காகவே அமைதியாக இருந்து இறை சிந்தனைக்கு உரிய செயல்பாட்டினை செய்வது வழமையாக இருக்கின்றது. எமது முன்னோரால் தேவார திருவாசகங்கள் பாடுவது ஓதுவது பிரிகின்ற உயிருக்கும் உடன் இருப்போருக்கும் அமைதியையும் இறைசிந்தனையையும் ஏற்படுத்துகின்றது.

இறந்தவரின் உடலை தெற்கே தலை இருக்கும்படி கிடத்தல்

வடக்குத் திசையில் தலை வைத்துப் படுத்தால், உடலுக்கு கெடுதல் ஏற்படும் என்ற நம்பிக்கை உண்டு. இறந்தவரின் தலை வடக்கே இருக்குமாயின் உடலுக்கு பாதிப்பு ஏற்பட்டு உடல் விரைவாக பழுதாகிவிடும் என்பதற்காகத் தெற்கே தலை இருக்க வேண்டும் என்ற வழக்கமாக உள்ளது.

உடல் விறைப்பதற்கு முன்னதாகசெய்யப்பட வேண்டியவை

உடலின் வாயும், கண்ணும் மூடப்பட்டு உள்ளனவா? கால் பெருவிரல் இரண்டும் இணைக்கப்பட்டு உள்ளனவா? என்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியம். கட்டுப் பற்கள் உள்ளவர் வாயில் பற்கோவைகள் உள்ளனவா என்றும் பார்த்து உறுதிப் படுத்தல் அவசியம். இவைகள் உயிர் நீங்கிய உடனே செய்யப்பட வேண்டும். உடல் சூடாறி விறைத்து விட்டால், பின் இலகுவாக செய்ய முடியாது. அதனாலேயே உடனே செய்ய வேண்டும். தற்காலத்தில் மருத்துவ மனைகளும், இறுதிச் சடங்கை நடாத்த உதவுகின்ற நிலையங்களும் இருக்கின்றன. அவை இவைகளை கவனித்துக் கொள்ளும். அப்படி உடன் வசதி இல்லாத இடத்தில், குடும்பத்தில் உள்ளவர்கள் எவரும் இவற்றைச் செய்யலாம்.

உடலின் தலைமாட்டில் ஒரு குத்து விளக்கு ஏற்றுதலின் விளக்கம் தற்காலத்தைப் போல முற்காலத்தில் மின் விளக்குகள் இருக்கவில்லை. குத்துவிளக்குகளே ஒளி உயிர்பிரிந்த உடலின் முகத்தை தெளிவாக பார்பதற்காக முற்காலத்தில் தலைமாட்டில் குத்துவிளக்கை ஏற்றி வைக்கும் வழக்கம் ஏற்பட்டு இருக்கலாம். இக்காலத்தில் கலாச்சார முறையில் இந்த வழக்கத்தைத் தொடர்ந்து செய்து வருகின்றோம். மேலும் இறைவன் ஒளிவடிவானவன். அந்த ஒளியை ஏற்றி வைக்கும் போது இறைவன் அங்கே கூடவே இருக்கின்றார் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படுகின்றது.

தேவார திருவாசகங்கள் ஓதுதல்

உயிர் பிரிகின்ற போதும். பின்னர் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்ற, நிறைவுபெறும் வரையும், அதன் பின்னரும், குடும்பத்தினரோ அல்லது நண்பர்களோ யாராய் இருப்பினும், திருமறைகளை ஓதலாம். ஏலாதநிலையில் திருமுறைகள் கொண்ட ஒலி நாடாக்களைப் பயன் படுத்தலாம். அதில் தவறில்லை. நேரடியாக பாடப்படுவது உத்தமம். பாடப் படும்

திருப்பாடல்கள் இறப்புடன் தொடர்பான பாடல்களாக இருப்பது சாலச் சிறந்தது. பஞ்சபுராண முறையைப் பின்பற்றி ஓதிய பின்னர் திருப்புகழ், பட்டினத்தடிகளார் பாடல்கள் போன்ற பாடல்களை ஓதலாம். இசையோடு பாடவேண்டும் என்ற நியதி இல்லை. பயபக்தியோடு ஓதினால் போதுமானது.

உடலைவிட்டு உயிர் நீங்கியவுடன், உயிரானது சாதாரண கண்களுக்குத் தெரியாது. ஆவி உடலோடுதன் தன் பூத உடலை அண்மித்து நிற்கும். நம்பிக்கை என்பது வானிலே கலந்து வேறு உடலுடன் மீளப் பிறப்பதற்கோ, அல்லது இறைவனது திருவடியிற் சேர்ந்து பிறவாமை எய்துவதற்கோ குறைந்த பட்சம் முப்பது நாட்கள் தொடக்கம், ஒருவருட காலம் எடுக்கும் என்பதும் ஒரு நம்பிக்கை. எல்லா உயிர்களும் இறந்தவுடன் இறைவனைச் சேர்ந்தடைய மாட்டா. அவரவர் செய்த கர்ம பலன்படிதான் இறைவனை அடைவதும், மீளப் பிறப்பதும், நடக்கும் என்பதும் நம்பிக்கை. இருப்பினும் இறந்தவருடைய உயிர்கள் எல்லாம் இறைவனைச் சென்றடைய வேண்டும், என்பதே உயிரோடு இருக்கின்ற எல்லாருடைய விருப்பமாக இருக்கின்றது. இதனால்தான் இறைபதம் எய்தினார், சிவபதம் அடைந்தார் என்று பொதுவாக சொல்லுகிறார்கள்.

இந்த நம்பிக்கைகளின் விளைவாக, இறந்த உயிரை இறைவனுடைய உணர்வோடு இருக்கச் செய்யவும், உலகவாழ்வு விரும்பத்தக்கதல்ல-இறைவனின் திருவடியே வேண்டத் தகுந்தது என்பதை உயிர் மறவாமல் இருக்கவும், உயிருக்கு உறுதுணை புரிவதற்காகவும், இறுதிக் காலத்தில் திருமுறை ஓதும்வழக்கம் ஏற்பட்டு இருக்கலாம்.

ஒப்பாரி வைத்தல், குழறி அழுதல்

உயிர் அடங்கிய பின் இறந்தவரின் குடும்பத்தாரும் நெருங்கிய உறவினரும். பிரிவாற்றாமையால் வாய்விட்டு குழறி அழுவது தவிர்க்க முடியாத நிலையாக இருந்தாலும், உளவியல் முறையில் இதுநடக்க வேண்டிய ஒரு செயலாகவே இருக்கிறது.

துக்கம் நீங்குவற்கும் குறைப்புதற்கும் இது ஒரு சுலபமான வழியாகிறது.

துக்கத்தை மனதில் அடைக்கி பேசாது இருப்போர்க்கு மனநோய் ஏற்படவும் இடமுண்டு. இதனால் தான் பெண்கள் ஒப்பாரிவைத்து கட்டியழும் வழமையை எம்முன்னோர் ஏற்படுத்தினர். தற்காவத்தில் இதை நாகரீகம் அற்ற செயல் என்று கருதுகின்றார்கள். இடம் பொருள், காலம், அறிந்து வாய்விட்டு அழுது புலம்புவதால் நன்மையே அன்றி தீமை இல்லை. திருமறைகள் ஓதும்போதும் கிரியைகள் நடக்கும்போதும், அழுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

ஈமக்கிரியை

இறப்புக் காலங்களிலே செய்யப்படும் சடங்குகள் இரண்டு வகையான நம்பிக்கைளின் பெயரில் செய்யப்படுகின்றன. ஒன்று இறந்தவரின் குடும்பத்தவர்களும் உறவினர்களும் துக்கத்தில் இருந்து விடுபட்டு, வழமையான நிலைக்கு திரும்ப வேண்டும் என்ற நம்பிகையில் செய்யப்படும் சடங்குகள். மற்றது இறந்தவரின் உயிர் இறைவனை சென்றடைந்து மீண்டும் பிறவாமை எய்த வேண்டும் என்ற நம்பிக்கையில் செய்யப் படும் சடங்குகள். எனவே ஈமக்கிரியைகளில் மனோதத்துவமும் சமயநம்பிக்கையும் கலந்த சடங்குகள் இடம் பெறுகின்றன என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

சைவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் நாடுகளில் இந்தக் கிரியைகளை சைவ குருமார் செய்து வருகிறார்கள். அவர்கள் இடத்துக்கிடம் கிரியைகளை மாற்றிச் செய்கிறார்கள். எப்படி அவர்கள் செய்தாலும் அடிப்படைக் கொள்கைகள் மாறுபட்டதாக தெரியவில்லை. இறந்த உயிரானது அமைதியும் நற்கதியும் அடைய வேண்டும் என்ற கொள்கையிலேயே கிரியைககள் நடைபெறுகின்றன. புலம்பெயர்ந்த நாடுகளில், சைவ குருக்கள் மார் கிடைப்பது அரிது. எனவே புலம்பெயர்ந்து வாழ்வோரில் சைவ ஒழுக்க நெறியில் நிற்பவர் எவராய் இருந்தாலும் இந்த

கிருகையை செய்ய தயாராக இருக்க வேண்டும். ஆதியிலே சாதாரண மக்கள் தான் இந்தச் சடங்கை நடத்தினார்கள். புலம்பெயர்ந்த தேசங்களில் சைவ சீலர்கள். மன நம்பிக்கை கொண்டவர்கள் இந்த கிரியைகளைச் செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் ஒரு சமூக தேவையும் எற்பட்டு உள்ளது இதை உணர்ந்து அனைவரும் செயல்பட வேண்டியது அவசியம்.

இந்த நூலிலே சொல்லப்படும் கிரியை முறைகள் நான் பிறந்து வளர்ந்த யாழ்பாண குடும்பங்களில் நடந்த முறைகளை மனதில் வைத்தும் புலம் பெயர் நாடுகளில் சைவத் தொண்டர்கள் நடாத்தும் கிரியைகளை கவனித்தும், எழுதப் பட்டு உள்ளன. சில இடங்களில் கால தேச நடைமுறைகளுக்கமைய சிறு மாற்றங்கள் செய்யப் பட்டு உள்ளன. நடைமுறையில் வித்தியாசம் இருப்பினும் அடிப்படை கொள்கைகள் விடுபடவில்லை என்பது தெளிவு.

சுருங்கச் செய்து விளங்வைத்தல்

கிரியைகளை சுருக்கமாக செய்து பங்கு பெறுவோருக்கும். பார்ப்போருக்கும், விளங்கிக் கொள்ளும் வகையில் நடைமுறைப் படுத்த வேண்டும். இறந்தவரின் உடல் வைக்கப் பட்டிருக்கும் இடத்தில் அனைவரும் அமைதியாக வீண் வார்த்தைகள் பேசாமலும், அமைதியாகவும் இருத்தல் வேண்டும். குறிப்பாக திருமுறைகள் ஓதப்படும்போதும் கிரியை நடக்கும் போதும், இறைசிந்தனையில் இருக்க வேண்டும். பொதுவாக சைவசமயத்தவர்கள் அனைவருக்கும் தெரிந்தது சிவபுராணம், சிவவணக்கம். இதை அனைவரும் தெரிந்து ஓதினால் இறை சிந்தனையும் அமைதியும் உண்டாகும். இது இறந்தவருக்குச் செய்யும் ஒரு மரியாதையும் பெருமதிப்புமாகும்.

பிள்ளையார் வணக்கம்

எந்தக் கருமத்தை தொடங்கும்போதும். பிள்ளையாருக்கு முதல்வணக்கம் செய்யும் வழக்கம் சைவர்களிடையே உண்டு. செய்யப் படுகின்ற கருமத்தை தடைகள் ஏதும் ஏற்படாமல் காக்கவல்ல கடவுள் பிள்ளையார் என்பது நம்பிக்கை. பிள்ளையார்

மண்ணிலாலோ, மஞ்சள். மாவினாலோ, மாட்டுச் சாணத்தாலோ பிடிக்கலாம். உச்சியிலே அறுகம்புல்லைச் சூட்டுவது வழக்கம். அறுகு உயிர் தன்மை உடையது. மங்கள கரமானதென்றும் பொருள்கொள்ளலாம். இறைவன் எப்பொருளிலும் இருக்கின்றார் என்ற கொள்கையில் பிள்ளையாரின் எளிமையான உருவம் அமைகின்றது எனவும் கொள்ளலாம்.

சிவ கும்பம் வைத்தல்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் எனும் ஐந்தொழில்களையும் புரியும் ஒரே இறைவன் சிவபெருமானே என சைவர்கள் நம்புகின்றார்கள். அப்பெருமான் சிவனும் சக்தியுமாய் இணைந்து இருப்பதால் ஒரே கும்பத்தில் சிவனும் சக்தியும் எழுந்தருளும்படி வேண்டுதல் செய்து அப்பெருமான் அந்த கும்பத்தில் எழுந்தருளி இருக்கின்றார் என்ற நம்பிக்கையோடு கிரியைகளை செய்தல் வேண்டும்.

எண்ணை அரப்பு வைத்தல்

இது இறந்தவரின் உடலை சுத்தம் செய்யும் முகமாகவும் மற்றும் அவரின் குடும்பத்தவர்கள் உறவினர்கள் துக்கம் நீங்கும் பொருட்டும் இச்சடங்கு செய்யப் படுகின்றது. தாயகத்தில் உண்மையாகவே வீட்டின் பின்புறமாக ஒரு பந்தல் போட்டு நடைபெறுவது வழமை. புலம்பெயர் நாடுகளில் அதை செய்ய முடியாத காரியமாவதால் ஒருநம்பிக்கையோடு மாவிலையால் தெளித்து நம்பிக்கையோடு நடக்கின்றது.

அரப்பெண்ணை வைக்கும் முறை

முதலில் அரப்பு எண்ணை தேசிக்காய் போட்டு எண்ணை உச்சியில் வைக்க வேண்டும். அதை உறவு முறைகாறரும் குடும்பத்தாருமே செய்ய வேண்டும். அதைசெய்பவர்கள் 31 நாள் வரை கோவிலுக்கு போகாமல் ஆசுசம் காக்க வேண்டும். 18வயதுக்கு உள்பட்டவர்களும், மனைவி பெறுமாதமாக இருப்பவரும், தகப்பன் உயிரோடு இருப்பவரும் தவிரக்கப்படுவது நல்லது. முதலில் உடலை சுத்தி செய்யும் படி அபிசேக பொருட்களை

கொண்டு அபிசேகம் செய்தல் வேண்டும். இது அவரை சிவமாக நினைத்து, சுத்திகரித்து நீராட்டி இறந்தவரை புனிதப்படுத்தும் ஒரு நம்பிக்கை செயலாகவே செய்யப் படுகின்றது. அபிசேகம் முடிந்த பின்னால் அவருக்கு பத்தாடை சூட்டி மாலை அணிவித்து வீபூதி மூன்று குறிவைத்து சந்தணம் குங்குமம் பொட்டுவைத்து ஈசனாக்க வேண்டும்.

கொள்ளிக் குடம் வைத்தல்

இது மண்ணிலால் ஆன சின்ன வாய் கொண்ட குடத்தில் வைக்கப்புடுகின்று. இந்தக் கும்பத்தில் இறந்தவரின் உயிரை தாங்கும்படியும், அப்படித்தாங்கிய உயிரை சிவபெருமானுடைய வேண்டுதலினால் மல நீக்கம் செய்தல் பொருட்டும் இக்கும்பம் உதவுகிறது. தடுமாற்றம் அடைந்திருக்கும் உயிரை ஆறுதல் படுத்தி இறைவன்தான் நித்தியமான உருவம் அவனிடத்திலே போய் சேரவேண்டியதே உனது கடமைப் கர்மவினைகளை பொடியாக்கி அந்த பெருமானை நாட ஆயத்தமாய் கும்பத்தில் வந்து நில் என்று வேண்டுதல் செய்வதற்கான அமைப்பு. இறந்தவரின் உடலை காடுவரை வமாக்கிய உடலோடு இட்டுச் சென்று அங்கு மூன்று முறைகள் ஓட்டை போட்டு அதில் இருந்து ஓடிவரும் கும்ப நீரை இறந்தவரின் உடலில் தெளிக்க வேண்டும். தெளிக்கும்போது பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை ஆணாசை எல்லாம் மறந்து நீக்கப் பட்டு விட்டன - என்ற நம்பிக்கையில் இந்த சடங்கு செய்யப் படுகின்றது என்று கொள்ளலாம்.

தீ வளர்த்தல்

இறைவன் ஒளிவடிவானவன். இயற்கையில் இந்த ஒளிவடிவவை பிரதிபலிப்பது தீ. தீயை வளர்த்து அதை சிவக்கனி என்று வழிபட்டு அதனிடத்தே சகல பொருள்களும் அடங்கி ஒடுங்கும் என்றும், அது சுத்திகரிப்பின் சாதனம் என்றும், வழிபடும் வழக்கம் சைவ சமயத்தவரிடம் உண்டு. ஆகவே இறுதிச் சடங்கின்போதும் இதனை வளர்த்து சிவமாக்கிய உடலுடன் சுடலைக்கு எடுத்துச் சென்று உடலை எரிப்பதற்கு பயன் படுத்துவது வழக்கம். தீக்கொள்ளியை (சந்தனக்கட்டை) கடமை செய்யும்

உரிமையாளரிடம் கொடுத்து மூன்று முறை சுற்றிவந்து மூன்று தரம் பானையை கொத்தி ஓட்டைஇட்டு தண்ணீர் தெளித்து தீ மூட்டப்பட்டு தீயுடன் இருக்கும் சந்தனக் கட்டையை தலையில் வைத்து விட்டு திரும்பி பார்க்காமல் கடமை செய்பவர் வெளியிலே போய் முட்டியையும் சட்டியையும் உடைத்து எறிய வேண்டும். இது தாயகத்தில் சுடலையில் நடக்கும் நிகழ்வாகும். ஆனால் இப்போது புலம்பெயர் தேசங்களில் இப்படி நடத்த முடியாது. இந்த நாட்டு சட்டதிட்டங்களுக்கு எற்ப, இங்கு இப்படி தீவளர்ப்புச்சடங்கை செய்வது கடினம். உடல் வைக்கப் பட்டு கருமம் செய்யும் மண்டபங்களில் இப்படிச் செய்ய வசதிகள் இல்லை. பொது இடங்களில் தீ மூட்டுவது சட்டதிட்டத்துக்கு அமைவானது. அகவே இந்த முறையையும் ஒரு மாற்றப்பட்ட முறையாகவே செய்யவேண்டும். ஆகவே கொள்ளி குடத்துடன் மூட்டிய சந்தனக்கட்டையை கடமைக்குரியவர் எடுத்து சென்று சிவமாகிய இறந்தவர் கிடக்கும் பெட்டியைச் சுற்றி கடமையை செய்வதே சரியாகப் படுகின்றது.

உடலை தீக்கிரையாக்காத ஒரு சைவச்சடங்குமுறை உள்ளது அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்தத் தீ எடுத்துச் செல்லும் சடங்கை விட்டு விடலாம்.

சுண்ணம் இடித்தல்

இந்த சடங்கு சிவபெருமானுக்குச் செய்யப்படும் நம்பிக்கைச் சடங்கு. உடல் சுத்தி செய்யப் பட்டு, சிவகும்பத்தின் நீர் அதன் மேல் தெளிக்கப் பட்டுப் பிரேதம் சிவமாகப் பட்ட பின்னர் அது சிவபெருமானைப் பிரதிபலிக்கின்ற ஒரு ஒப்பனைப் பொருளாகக் கருதப்படுகிறது. எனவே உயிரின் மலநீக்கத்தை முன்னிட்டு சிவபெருமானை வேண்டி சுண்ணம் இடிக்கப் படுகின்றது. இது உயிரின் பாவங்களைப் பொறுத்து, அதை தூய்மை செய்து உமது பாதத்தில் சேர்த்துக் கொண்டருளும் என்று வேண்டுதல் செய்கின்ற ஒரு உபசாரக் கிரியையே. உடலின் கால்மாட்டில் ஒரு சிறு உரலை நிறுத்தி அதனுள் அறுகம்புல், கொஞ்சம் மஞ்சள்மாவு, கொஞ்ச பச்சைஅரிசி, கொஞ்சம் நல்லெண்ணை

போன்றவற்றை இட்டுஇ கிரியை செய்யும்இ உரிமையாளரின் வலது கையில் உலக்கையை கொடுத்து. சுண்ணத்தை இடிக்கும் படி செய்வேண்டும். சுண்ணம் இடிக்கின்ற பொழுது மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த இருபது திருப் பொற்சுண்ணப் பாடலைப் பாடி ஒவ்வொரு பாடல் இறுதி வரிமுடியும் போதும் உலக்கையை தூக்கி இடித்து உரலுக்கு கற்பூர தீபம் காட்டி கடைசியாக உடலுக்கும் காட்டவேண்டும். இடித்து முடிந்ததும் இடிக்கப் பட்ட சுண்ணத்தை கடமை செய்பவர் அள்ளி இருவெற்றிலையில் சின்னதாய்க் கிழித்த வெள்ளைத் துண்டை மேலே விரித்து அதன்மேல் உரலில் உள்ள சுண்ணத்தை இரண்டாகப் பிரித்தெடுத்து இரண்டு வெற்றிலையிலும் சமனாக பகிர்ந்து வைத்து கடமைசெய்பவர் இரண்டு கரத்திலும் ஏந்தி சென்று சிவமானவர் நெஞ்சில் வைத்து பின் இரண்டிலும் சிறுதொகைகளை கிள்ளி எடுத்து சிவமானவர் இரு கண்களிலும் வைக்க வேண்டும். பின் கடமைசெய்பவர் சிவமானவருக்கு கற்பூரதீபம் காட்டி சுற்றி வந்து அந்த தீபத்தில் சிவ அக்கினியை மூட்டவேண்டும். இந்தக் கடமை இறந்தவர். தெரிந்தோ, தெரியாமலோ, செய்த பாவங்கள் எல்லாம் பொடிப்பொடி ஆகிவிட்டன - ஈசனே இவருக்கு இனி ஞான ஒளியை ஈந்து ஆட்கொண்டு நல்வழிகாட்டும்படி இறைவனை வேண்டுவதாக பொருள்படும் ஒரு நம்பிக்கைச் செயல்பாடே.

இறுதிச் சடங்கில் சுண்ணம் இடிக்கும்போது சுண்ணம் இடிக்க இறந்தவரின் ஆண்பிள்ளையை அழைப்பது வழமை. தந்தையாய் இருந்தால் மூத்தமகனும். தாயாய் இருந்தால் கடைசிமகனும். கொள்ளிக் குடத்தை தூக்கிச் செல்லவேண்டும். ஆண் மக்கள் எல்லாரும் சுண்ணம் இடிக்கும்போது உலக்கையை பிடிக்கலாம். இடிக்கலாம். ஆனால் பெண்பிள்ளைகள் ஏன் இடிக்ககூடாதா? என்ற கேள்வியும் உண்டு. எமது முன்னவர்கள் காரணம் இல்லாமல் அந்த வழக்கத்தை வைக்க மாட்டார்கள். ஆனால் ஆண்பிள்ளை இல்லாத பெற்றவர்களுக்கு பெண் பிள்ளைகள் புலம்பெயர் தேசத்தில் மட்டுமல்ல - தாயகத்திலும் இப்போது செய்கின்றார்கள். திருப்பொற்சுண்ணப் பாடல்களும் பெண்கள்

பாடுகின்றார்கள். ஆனால் மரபுவழியாக சுண்ணம் இடிப்பது ஆண்பிள்ளைகளே.

பந்தம் பிடித்தல்

பாவநீக்கமும் மலநீக்கமும் வேண்டுதல் செய்யப்பட்ட பின்னர் திருவருள் கூடவேண்டும் என்பதற்காகப் பந்தம் ஏற்றப்படுகின்றது. இவ்விடத்தும் ஒளி சிவனருளின் ஒப்பனையாக அமைகின்றது எனக் கொள்ளலாம். இறந்தவரின் பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் ஆண் பெண் இருபாலரும் உடலைச் சுற்றி நின்று நெய்ப்பந்தம் பிடிப்பது வழக்கம். புலம்பெயர் நாடுகளில் பந்தம் சுற்றுவது கடினமானதால், மெழுகுதிரியை பந்தங்களுக்கு பதிலாக பயன்படுத்துவது வழமையாகி விட்டது.

மனமொத்த மலர் அஞ்சலி இறுதிச் சடங்கு நிகழ்வில் கலந்து கொள்ளும் நண்பர்கள் அனைவரும் இறந்வரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென வேண்டி நிறைவில் மலர் அஞ்சலி செய்வது வழக்கம். இந்த நிகழ்வில் எல்லோரும் கலந்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் தம் குலதெய்வங்களை நினைத்து இறந்தவர் பாதத்தில் மலர்களை நிறைத்து சாந்தி பெற வேணடுவதே இந்த நகழ்வின் நம்பிக்கை. ஒரு அன்பு அலையை உண்டாக்க அனைவரும் எழுந்து ஒரு நிமிட மௌன ஆஞ்சலியும் செய்யலாம். இந்த அஞ்சலி இறந்தவரைச் சென்றடையலாம் என்ற ஒரு நம்பிக்கை.

இத்தருணத்தில் ஒருவரோ அல்லது பலரோ சேர்ந்து தேவார புராணங்களை, படடினத்தார் படல்களைப் நித்தார் விண்ணப்பங்களை பாடலாம். இதில் பாடுபவர்கள் ஒரு பக்தி நிலையில் இறை சிந்தனையில் இருந்து இதை செய்யவேண்டும். மலர் தூவுபவர்கள் பாதம்தொட்டு தலை வரை தூவுவார்கள் இறந்தவர் ஈசனை அடையவேண்டுமென வேண்டுதல் செய்து.

வாய்க்கரிசி இடுதல்

இந்த செயலை சிலர் பிழையான விளக்கத்துடன் செய்கின்றார்கள். அதாவது இறந்தவருக்கு தாம் உணவூட்டுவதாக நினைத்தபடி சவமானது சிவமாக்கப்பட்டு செய்கிறார்கள். மலநீக்கம் செய்யப்பட்டு, வேண்டுதல் செய்யப்பட்டு, உயிரை, உலகப் பிணிப்புக்களை நாடாதே என்று கோரப்பட்டபின், நாம் எமது உறவினருக்கு உணவு ஊட்டுகின்றோம் என்ற நினைப்போடு இந்த சடங்கை செய்வது பொருத்தமாகாது. அப்படி என்றால் ஏன் வாய்க்கரிசி இடும் வழக்கம் வந்தது என்ற கேள்வி எழலாம். ஆதி காலத்தில் இந்த நிகழ்வுக்கு பயன் படுத்தும் பொருள் அரிசியல்ல நெல்லுப் பொரியே. நெல்லுப்பொரி முளைக்காத பொருள். இறந்தவர் மீண்டும் இவ்வுலகில் பிறக்கமாட்டார். இறைவனிடம் இரண்டறக் கலந்து கொள்வார் என்ற நம்பிக்கையில் நெற்பொரியை போடுவது. புலம்பெயர் தேசத்தில் நெல்லு கிடைப்பது கடினம் என்ற காரணத்தால் அரிசியை அதுவும் முளைக்காத பொருள் என்ற காரணத்தால் அதை பயன் படுத்துகிறோம்.

நெல்லை நாம் பொரிக்கும் போது அதை மூடியுள்ள உமியும் தவிடு, அரிசி, போன்றவற்றை விட்டுப் பொரி வருவதுபோல் இறையடி சேர்ந்தவர் இடம் இருந்த ஆணவம், கருமம், மாயை என்ற மும் மலங்களும் நீங்கி ஈசன் திருவடி சேர்ந்தார் என்பது நம்பிக்கை ஆகும். முக்கியமாக இறந்தவர் பிறவாமை பெற வேண்டும் என்பதே இச்சடங்கின் நம்பிக்கை யாகும்.

பெட்டி மூடல்

கிராமங்களில் முற்காலத்தில் வீட்டில் மூடப்பட்ட பெட்டி சுடுகாட்டிலேயே திறக்கப்பட்டது. அங்கேதான் ஆண்கள் வாய்க்கரிசி இடுவார்கள். உடலில் உள்ள ஆபரணங்கள் அங்கேதான் அகற்றப்படும். இவை நடந்த பின்தான் கொள்ளிக் குடம் உடைக்கப்பட்டு தீ மூட்டப்படும். முற்காலத்தில் ஆண்கள் மட்டும்தான் சுடலைக்கு போவார்கள். பெண்கள் செல்வதில்லை. தற்காலத்தில் இந்த வழக்கம், மாறிவிட்டது. பட்டணங்களிலும்,

புலம்பெயர் தேசங்களிலும் சுடலைகள் காடுகளல்ல. நவீன சாதனங்களும் மண்டபங்களும் இதற்கென இருக்கின்றன. ஆகவே ஆண்பெண் இருபாலரும் சுடலைக்கு செல்கின்றனர். எனவே தீ யிடுவதை தவிர்த்து, மற்றைய நிகழ்வுகளை உடலோடு தொடர்பான ஏனைய நிகழ்வுகளை, மண்டபத்திலே செய்து கொள்வது வசதியும் சிறப்புமாகும். ஆகவே பெட்டி மூடுவதற்கு முன்னர் உடலில் உள்ள ஆபரணங்களை கழட்டி குடுப்பத்தோடு தொடர்புள்ள ஒருவரிடம் ஒப்படைப்பது சிறந்தது. அதை உறவுக்காரர் ஒருவரே கழட்டி உரிமைக்காரரிடம் வழிசெய்தல் வேண்டும். இதில் ஒரு முக்கியமான நிகழ்வு உண்டு. மனைவி இருக்க கணவன் காலம் சென்றால். மனைவியின் தாலிக்கொடியை கழட்டி உடல் அபிசேகம் முடிந்தவுடன் இறந்தவரின் நெஞ்சில் வைத்து பின் பெட்டி மூடும்போது கவனமாக எடுத்து உரியவரிடம் சேர்க்கவேண்டும். இது ஒரு மனவருத்தமான செயல்தான். ஆனால் விரும்பி செய்ய வேண்டிய செயல். விரும்பாவிட்டால் கட்டாயப்படுத்த முடியாது. அது கட்டாயமான செயல். அவரிடம் சொத்து கொடுத்து எடுப்பதால் குறையில்லை. அப்பெண் இனி அதை அணிய சமூகம் இடம் கொடுக்காது. இதை ஒரு தாலியின் சிறப்பைக் சொல்லும் சடங்காகவும் இவர்களின் தாம்பத்திய குடும்ப சிறப்பாகவும் நம்பலாம்.

தீயிடும் போது ஆபரணங்கள் இருத்தல் ஆகாது

தீயிடும் போது உடலில் எந்தவித நகையும் இருக்க கூடாது என்ற ஒரு நம்பிக்கை உண்டு. ஏன் என்றால் அவர் முற்றும் துறந்த ஆசைகள் அற்ற இறைவனாகி விட்டார் என்ற நம்பிக்கைதான். சிலர் நகைகளை கழற்றாமல் விட்டு விடுகின்றார்கள். அவர் ஆசையாக வாங்கியது, விரும்பி வாங்கியது என்ற காரணங்களை வைத்து. ஆனால், அது சடங்கில் உள்கருத்துக்கு முரணான செயலாகும். அசைகளை விட்டுவிடல், அனைத்தையும் துறந்து விடல் என்ற ஒரு சடங்கை செய்து விட்டு நகைபோட்டு அனுப்புவது முறையல்ல. அவர் இப்பொழுது சிவம் என்ற நம்பிக்கையோடு வழி அனுப்புவதே சிறந்தது உத்தமம்.

இறந்தவரின் ஆவிக்கு பயப்படுதல்

இறந்தவரின் ஆவி துன்பம் செய்யுமொ? கேடு விளைவிக்குமோ? என்று சிலர் பயம் கொள்வது உண்டு. இது அர்த்தம் அற்ற பயம். ஆவியாக உள்ள உயிருக்கு ஐம்பொறிகளின் துணையில்லை என்றும் ஐம்புலன்கள் அதில் அமிழ்ந்திருந்தாலும், அது ஆவி நிலையில் இருக்கும்போது பூவுலகுக்கு உரிய தன்மை அதனிடம் இல்லை என்றும் நம்பப் படுகின்றது. அது அவி உலகையே நாடி நிற்கும் என்றும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நமது மனப்பயத்தால் ஏற்படும் துன்பங்களை நாம் ஆவி துன்புறுத்து கின்றது என்றும் எண்ணுகின்றோம். ஆவி நிலையில் உள்ள உயிர்களை நாம் மண்ணுலக சூழலுக்கு இழுத்து ஈடுபடுத்தாமல் விட்டு விட்டால் அவை நமக்குத் துன்பம் தரப் போவதில்லை என்று சொல்லப் படுகிறது. விண்ணுலகம் சென்று இறைபேதம் எய்துக என்று வேண்டுதல் செய்து கொண்டால் நாம் அவிகளுக்கு பயப்பட வேண்டியதே கிடையாது.

பஞ்சமியில் இறந்தால்

இறக்கும் நாளில் பஞ்சமி திதி இருந்தால் பஞ்சமி குற்றமல்ல. அதில் பஞ்சமி திதியில் அவிட்டம், சதயம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி, போன்ற நட்சத்திரம் இருந்தால் அதற்கு குற்றம் இருக்கும் அதற்காக ஒரு உயிரை சேர்த்து அனுப்பவேண்டும் என்பது நியதி. அதற்காகவே நாம் ஒரு சின்ன வாழைக் கன்று, அல்லது ஒரு தென்னம் பிள்ளை, அல்லது முட்டை இரண்டு, பெட்டிக்குள் சாபிணத்துடன் சேர்த்து சுடலைக்கு பெட்டிக்குள் வைத்து எரித்து விட்டால் போதும். அது இப்பொழுது புலம்பெயர் தேசங்களில் குறைந்தது நாலு ஐந்து நாள் சென்று உடல் எடுப்பதால் தங்கு சவம் என்ற நம்பிக்கையில் இந்த வழமையை செய்கின்றார்கள்.

இறுதிக் கிரியைகளுக்குத் தேவையான பொருள்கள்

கடையில் வாங்க வேண்டிய பொருட்கள்

1.	விபூதி	-	1 பாக்கெட்
2.	கட்டி சந்தனம்	-	1 பாக்கெட்
3.	குங்குமம்	-	1 பாக்கெட்
4.	மஞ்சள் பொடி	-	1 பாக்கெட்
5.	கற்பூரம்	-	1 பாக்கெட்
6.	நல்லெண்ணெய்	-	1 சிறிய போத்தல்
7.	அரப்புத்தூள்	-	1 சிறிய பாக்கெட்
8.	தேங்காய்	-	3
9.	வெற்றலை	-	20
10.	முழுபாக்கு	-	20
11.	மாவிலை	-	20
12.	அறுகம்புல்லு	-	1 கட்டு
13.	தலைவாழையிலை	-	1 கட்டு
14.	குப்பைபோடகறுப்பு பேக்	-	2 கட்டு
15.	பச்சரிசி	-	2 கிலோ
16.	வெள்ளைத்துணி	-	½ மீட்டர்
17.	விளக்குத்திரி	-	1கட்டு
18.	தேங்காய் எண்ணை	-	1 பாக்கெட்
19.	தீப்பெட்டி	-	1
20.	கை துடைக்க பேப்பர்	-	3 கட்டு
21.	சொரிபூக்கள்	-	1 பெட்டி
22.	ஆண் என்றால்	-	1 வேட்டி
23.	பெண் என்றால்	-	1 சேலை

(அபிஷேகம் செய்தபின் பிரதத்தில் போட)

அபிசேகத்துக்கு உரிய பொருட்கள்

1. வாழைப்பழம் - 10
2. மாம்பழம் - 1
3. தோடம்பழம் - 1
4. தேசிக்காய் - 3
5. பலாப்பழம் - 1
6. பால் டப்பா சிறியது - 1
7. தயிர் டப்பா சிறியது - 1
8. இளநீர் - 1
9. பன்னீர் பாட்டில் - 1
10. சென்ட் அத்தர் பாட்டில் - 1

வீட்டில் இருந்து கொண்டுவர வேண்டிய பொருட்கள்

1. கும்பம் வைக்க சில்வர் குடம் - 2
2. சிறிய வாயுடைய மண் முட்டி (கொள்ளிக்கு) - 1
3. குத்துவிளக்கு - 4
4. சந்தனக்கும்பா - 1
5. குங்கும டப்பா - 1
6. சில்வர் டிரே - 5
7. பெரிய சில்வர் டம்ளர் - 3
8. சில்லறைக்காசு
9. கீழே நிலத்தில் விரிக்க பிளாஸ்டிக் சீட் - 3 மீட்டர்

பகுதி - 2

பூசை தொடங்கும்முன் ஆயத்தமாக செய்து வைக்கவேண்டிய ஆரம்ப நடைமுறைகள்

1. தேங்காய், பழங்கள் முதலியவற்றை கருவி எடுத்து மூக்கு வெட்டி தயாராக வைத்திருக்க வேண்டும்.
2. மண்பானை (முட்டி)யை எடுத்து நூல்சுற்றி தயாராய் புறத்தே வைக்கவேண்டும்
3. மஞ்சள் மாவில் பிள்ளையார் பிடித்து வைக்கவும்
4. நிலத்துக்கு பிளாஸ்டிக் விரித்து தண்ணீர் தெளிக்கவும்
5. தலைவாழையிலை போட்டு முதலாவதாக பிள்ளையார் கும்பம், இரண்டாவது சிவன் கும்பம், மூன்றாவது கொள்ளி கும்பம், வைத்து அந்த கும்பங்களுக்கு விபூதி சந்தனம் குங்குமம் சாத்தி பூ வைக்கவும்.
6. கால்மாட்டின் பக்கத்தில் உரலையும். உலக்கையையும் வைத்து அதற்கும் வீபூதி சந்தனம் குங்குமம் பூசி மூன்று மாவிலை வைத்து நூணியால் கட்டவும். மாவிலை உள்பக்கம் வெளியில் பார்க்க கட்டவும்.
7. ஒருதட்டில் பச்சை அரிசியை கொட்டி கொஞ்ச மஞ்சளைத் தூவி சில்லறைக் காசைபோட்டு கலக்கி வைக்கவும்.
8. மூன்று கும்பத்துக்கும் பழம் பாக்கு வெற்றிலை வைத்து சந்தனக்குச்சி குத்திவிடவும். இலையில் அரிசியை கொட்டியே கும்பம் வைக்கவும்
9. சிவன் கும்பத்தில் ஒரு டம்ளரில் சுத்தமான தண்ணீர் ஊற்றி வைக்கவும் பூப்போட்டு

10. குடம் கொத்தும் கத்தியை கொள்ளிப் பானைக்கு அருகில் வைக்கவும்குத்து விளக்குகளுக்கு ஒரு திரி போட்டால் போதுமானது

11. அதன் அருகில் கொள்ளிச்சட்டியை கரி போட்டு தயாராக சந்தனக் கட்டையும், சில கொள்ளிகளையும் போட்டு வைக்கவும்.

12. பிள்ளையார் கும்பத்தின் முன்னால் பழ வகைகள் வெற்றிலை பாக்கு பத்தி, போன்றவைகளை வைக்கவும்.

13. நிறுத்திய உரலுக்குள் பச்சைஅரிசி கொஞ்சம், மஞ்சள்மா கொஞ்சம், சிறு துண்டள்களாய் நறுக்கிய அறுகம் புல்லு கொஞ்சம், நல்லெண்ணை கொஞ்சம் விட்டு தயாராக வைத்திருக்கவும்.

14. எலுமிச்சைப் பழத்தையும் சிறு சிறு துண்டுகளாய் நறுக்கி போட்டு, அரப்பையும் தூளாக கொட்டி நல்லெண்ணை ஊற்றி கலந்து ஒரு தட்டில் வைக்கவும்.

15. உடலுக்கு போடும் பெரியபூமாலையை எடுத்து தயாராக வைத்திருக்கவும்.

16. பூசை முடிந்தபின் சுத்தம் செய்ய கறுப்புபேக் தயாராக வைத்திருக்கவும்

17. பேரப்பிள்ளைகள் பந்தம் பிடிக்க தயாராய் செய்து வந்த நெய்ப் பந்தமோ. அல்லது மெழுகுதிரியோ தயாராக எடுத்து வைக்கவும். இந்த நிகழ்வு சுண்ணம் இடிக்கும்போது சுற்றி நின்று செய்ய வேண்டும்.

பூசை ஆரம்பம்

1. வீபூதி சுத்திகரித்தல்

பூசை ஆரம்பமாகிறது என்பதை அறிவிக்க கைமணியை அடித்து விட்டு, கிரியைசெய்கின்ற உரிமையாளரை அழைத்து, அருகே நிற்க வைத்து விலைப்பொருளாக கடையில் வாங்கிய வீபூதியை சுத்திகரிக்கும் முகமாக திருஞான சம்பந்தருடைய திருநீற்றுப் பதிகம்- முதல் மூன்று பாடல்களையும் பாடி வணங்கி,

நீறை சுத்தம் செய்து அதன்பின் கடமைசெய்பவருக்கும் மற்றவர்குளுக்கும் கொடுத்து கையில் சிதோகை மலரையும் கொடுத்து இறந்தவரை சற்றிவந்து பாதபூசை செய்யும்படி சொல்லவும். பின் கற்பூரத்தைக் காட்டி பூசையை ஆரம்பிக்கவும்.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயாம் திருநீறே.

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு போதம் தருவது நீறு புன்மை தவிர்பது நீறு ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு பக்தி தருவது நீறு பரவ இனியது நிறு சித்தி தருவது நிறு திருஆலவாயான் திருநீறே.

பாடி முடிந்தபின் திருநீற்றை எடுத்து மூன்று விரல்களால் தொட்டு சிவ சிவ என்று கூறியபடி பிள்ளையார் கும்பம் சிவ கும்பம், கொள்ளிக் குடம் என்பனவற்றுக்கு தொட்டு சாத்தவும். பின் தாமும் சிவ சிவ என்று சொல்லி நெற்றியில் திருநீறு அணிந்து கொள்க. பின் உரிமையாளரிடம் சந்தனம் குங்குமத்தை கொடுத்து தொட்டு நடு நெற்றியில் வைக்கும்படி கூறிஇ செய்விப்பவரும் நெற்றியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. உறுதிப்பாடு

உரிமையாளரை பின்வரும் உறுதிப்பாட்டைக் கூறும்படி சொல்லி உறுதி எடுத்துக்கொள்ள சொல்லவும் எம்மை விட்டுப்பிரிந்த எனது, அல்லது எமது உறவுமுறையைச் சொல்லி அவருடைய அத்மா நற்கதியடைய அடையும் படிக்கும், அத்மா சந்தி பெறுதல் பொருட்டும், இந்த இறுதிக் கிரியை செய்ய முன்வந்துள்ளேன். இந்த கிரியை நிறைவுபெறும் வரைக்கும்

கண்ணும், கருத்துமாகவும். அமைதியாகவும் இருந்து கிரியை நிறைவேற்றுவேன் என உறுதியளிக்கின்றேன். உரிமையாளர் உறுதி கூறிய பின் சிவ கும்பத்துக்கு தீபம் காட்டுக.

3. பிள்ளையார் பூசை

முதலில் பிள்ளையாரை வணங்கி பிள்ளையாரை மனதில் நினைத்து நான் செய்யத் தொடங்கும் இந்த கிரியை குற்றம் குறை ஒன்றும் நிகழாமல் நிறைவு செய்து தருகவெனப் பணிவோடு வேண்டிஇ பூவும் நீரும் இட்டு, கிழ்வரும் பாடல்களை பாடச்செய்க.

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுத னுடையதோர்களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

பாடி முடிந்ததும் கற்பூரதீபம் காட்டுக...

4. சிவபூசை

சிவகும்பத்தில் சிவனையும் சக்தியையும் எழுந்தருளும்படி பணிவோடு மனத்தால் தியானித்து வேண்டுதல் செய்து பூசை செய்ய வேண்டும். நாற்புறமும் சுற்றி வந்து உரத்து செய்க..

சிவகும்பத்தில் சிவனையும் சக்தியையும் எழுந்தருளும்படி பணிவோடு மனத்தால் தியானித்து வேண்டுதல் செய்து பூசையை செய்யவேண்டும். நாற்புறமும் சுற்றி வந்து உரத்து சொல்க..

எல்லாம் வல்ல எம்பெருமானே! சிவனே படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும் ஐந்தொழில்களையும் நீரே புரிகின்றீர் என நாங்கள் நம்புகின்றோம். அம்மை அப்பராக எம்பெருமான் இந்த கும்பத்தில் எழுந்தருளி அருள் புரிய வேண்டுமென அன்பினால் அகம் குழைந்து மன்றாடி இறைஞ்சி வேண்டுகின்றேன் ஐயா!

இந்த உடலை விட்டு பிரிந்த உயிரானது. நற்கதி அடையவேண்டுமென்று இந்த கிரியையை ஆரம்பிக்கின்றேன்.

இறந்தவரின் குடும்பத்தினரும், நண்பர்களும், உறவுகளும், இந்த தீராத தன்பத்தில் இருந்து வெளியேறி மீண்டும் அவரவர் தமது வழமையான நிலைக்கு திரும்ப வேண்டுமென அன்பினால் அகம் குழைந்து வேண்டுகின்றேன் ஐயா குருவே!

பாடல் முடிந்த பின் பூவும் தண்ணீரும் விட்டு தீபம் காட்டி, பின் வரும் தேவாரங்களை அர்ச்சனையாக பாடவும்.

மற்றுப் பாற்றென்னைக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்

கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே!

போராயிரம் பரவி வானோர் ஏத்தும் மெம்மானை
பரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்

தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட

பேரானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாட் போக்கினேனே!

வேறாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளிந்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி

ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆற்றங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழல் அடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுதானாய் போற்றி
அல்லலறுத்து ஆடியேனை ஆட்கொண்டாய் போற்றி

மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாய் புனிதா போற்றி
நிறையுடை நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி

மறையுடை வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்டமுண்டாய் போற்றி
கையிலை மலையானே போற்றி போற்றி.

பாடி முடிந்த பின் கும்பத்துக்கு கற்பூரதீபம் காட்டுக.

இந்த நேரம் தொடக்கம் கும்பநீர் உடலில் தெளிக்கும் வரை சிவபெருமான் கும்பத்தில் இருக்கின்றார் என்ற நம்பிக்கையோடு கருமம் தொடர வேண்டும்

கொள்ளிக் குட பூசை

கொள்ளிக் குடத்துக்கு பூவும் நீரும் விட்டபின் இறந்தவரின் உடலை இக்கும்பத்தில் எழுந்தருள உதவும்படி மனதார பயபக்தியோட வேண்ட வேண்டும்

அது நிறைவேறியதும் இறந்தவரின் உயிரை இறைவனிடம் அனுப்ப தேவார புராணங்கள் பாடவேண்டும்

தேவாரம்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமஎன்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரி புலியூர்அரனே.

படைகல மாகஉன் நாமத் தெழுத்தைஞ்சென்
நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் ஏழுபிறப்பும் உனக்கு
ஆட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூநீறு அணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணி தில்லைச் சிற்றம் பலத்
தரனே.

கருவுற்ற நாள் முதலாக உன்பாதம் காண்பதற்கே
உருகிற்றென் உள்ளமும் நானும் கிடந்தலைந்து
எய்த்தொழிந்தேன்.
திருவெற்றியூரா! திருவாலவாயா! திருவாரூரா!
ஒருபற்றிலாமையுங் கண்டிரங்காய் கச்சி ஏகம்பனே.
திருச்சிற்றம்பலம் பாடி முடித்ததும் கற்பூரதீபம் காட்டுக.

திருப்பொற்சுண்ணம்

பொற்சுண்ணம் இடித்தல்

1. முத்துநல் தாழம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமி யும்பார் மகளும்
நாமகளோடுபல்லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே.

2. பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியும் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே.

3. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

4. காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

5. அறுகுஎடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்கணங்க ளெல்லாம்
நம்மிற்பின்பு அல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

6. உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

7. சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு

ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

8. வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மைஇம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

9. வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

10. முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

11. மாடு நகைவாள் நிலா எறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

12. மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

13. மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

14. சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந் துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்

கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே.

15. ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

16. ஆவகை நாமும் வந்தன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே.

17. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே.

18. அயன்தலை கொண்டுசெண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே.

19. வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
காங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்தும்நாமே.

20. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே

பஞ்சபுராணம்

தேவாரம்

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உள்ளே வைத்துப்
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமாவுன்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன்உன்னை
எங்குற்றாய் என்றுபோதால் இங்குற்றேன் என்கண்டாயே.

திருவாசகம்

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதற்கு என்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன், மண்ணாள், வான்
மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் ஈசையுமா றிசையே.

திருபல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக் கீழ்
ஆரும், பெறாத அறிவுபெற்றேன்பெற்றதுஆர்பெறுவார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக்காட்
பாரும்விசும்பும் அறியும் பரிசுநாமம் பல்லாண்டு கூறுதுமே.

பெரிய புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதும் உன் அடியின்கீழ் இருக்க என்றார்

திருப்புகழ்

பிறவியலை ஆற்றினில் ..... புகுதாதே
பிரகிருதிமார்க்கமுற் ..... றலையதே
உறுதிகுரு வாக்கியப் ..... பொருளாலே
உனது பத காட்சியை ..... தருவாயே
அறுசமய சாத்திர..... பொருளோனே
அறிவுளறிவார் குணக் ..... கடலோனே
குறுமுனிவன் ஏத்துமுத் ..... தமிழோனே
குமரகுரு காரத்திகைப் ... பெருமாளே

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

சிவபுராணம்

சிவனது அநாதி

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க. (5)

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க. (10)

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி (16)

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான் (20)

கண் நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன் (25)

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்.
(31)

மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே (35)

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே. (40)

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே. (45)

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
(50)

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
(55)

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே.
(61)

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே. (66)

ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே. (70)

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே.
(74)

கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார்
தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்.
(80)

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று. (85)

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே (90)

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. (95)

திருச்சிற்றம்பலம்

கச்சி திருஏகம்பமாலை

கட்டி அணைத்திடும் பெண்டீரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி அழுவார் மயானம் குறுகி அப்பால்
எட்டி அடிவைப்பரோ இறைவா கச்சி ஏகம்பனே!

காலம் வந்ததும் உயிரைப் பறித்திடும் காலன் வந்து நம் உயிரை எடுத்துக் கொண்டு, உடலை வெட்டி சாய்த்த மரம்போல வீழ்த்தும்போது, தாலிகட்டிய மனைவியும், பிள்ளைகளும் ஆ, ஊ என்று முழக்கமிட்டு அழுவார். இடுகாட்டுக்கு வந்து ஈமக்கிரியை செய்வதன்றி நம்கூட மேலும் ஒரு அடி எடுத்து வைப்பரோ கச்சி நகர் வாழ் ஏகம்பநாதனே!

பொல்லாதவன் நெறி நில்லாதவன் ஐம்புலன்கள் தமை
வெல்லாதவன் கல்வி கல்லாதவன் மெய்யடியவர் பால்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின் திருவடிக்கு அன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன் பிறந்தேன் கச்சி ஏகம்பனே!

நான் மிகப் பொல்லாதவன். நன்னெறிகளைக் கைக்கொண்டு வாழாதவன். புலன்களை வெல்லாமல் அவை போன போக்கில் போய் அழிந்தவன். கல்வி பயிலாதவன். மெய் அடியார்களைக் கண்டு வணங்காதவன், உண்மை பேசாதவன். இறைவா உன் திருவடியைப் பணியாதவன் அப்படிப்பட்டவனாகிய நான் ஏன் இந்த மண்ணில் வந்து பிறந்தேன் கச்சி ஏகம்பநாதலே!

பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடை நடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக்கு என் சொல்வேன் கச்சி ஏகம்பனே!

பிறந்தபோது எதையும் இந்த பூமிக்குக் கொண்டுவந்ததில்லை இந்த பூமியில் வாழ்ந்து முடிந்த பின் போகும்போது எதையும் கொண்டு போகப் போவதுமில்லை. இடையில் கிடைத்த இந்த செல்வங்கள் எல்லாம் இறைவன் தந்தது என்று தானும் அனுபவித்துப் பிறருக்கும் தந்து அறவாழ்வு வாழாத கீழ்மக்களுக்கு நான் என்ன சொல்வேன் காஞ்சி ஏகம்பநாதனே!

அன்ன விசாரம் அதுவே விசாரம் அது ஒழிந்தால்
சொர்ண விசாரம் தொலையா விசாரம் நற்றோகையாரைப்
பன்ன விசாரம், பலகால் விசாரம் இப்பாவி நெஞ்சுக்கு
என்ன விசாரம் வைத்தாய் இறைவா கச்சி ஏகம்பனே!

தினமும் சோற்றுக் கவலையே பெருங்கவலை. அதுதான் ஒரே கவலை. அது இல்லையென்றால் தங்கம் வாங்க வேண்டுமென்கிற கவலை அது முடிவில்லா கவலை. அழகிய பெண்களைக் கவரவேண்டும் என்கிற கவலை. பல நாளும்

இந்தக் கவலை, இவை தவிர இந்தப் பாவிக்கு என்ன கவலை வைத்தாய் இறைவா காஞ்சி வாழ் ஏகாம்பரநாதனே!

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும், நினையாப் பிழையும் நின்
அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே!

செய்துவிட்ட தவறுகள்தான் எத்தனை? படிக்காத தவறு. நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளாத தவறு. இறைவனை நினைந்து கசிந்துருகி வணங்காத தவறு. அவனை நினைக்காத தவறு. ஐயனின் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதாத தவறு. போற்றாத தவறு. வணங்காத தவறு இவை எல்லா தவறுகளையும் ஐயனே கச்சி ஏகம்பனே பொருத்தருள்வாய்!

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டி என்
கண்ணெதிரே
மாதென்று சொல்லி வரும் மாயைதன்னை மறலி வீட்ட
தூதென்று எண்ணாமல் சுகமென்று நாடும் இத்துர்புத்தியை
ஏதென்று எடுத்துரைப்பேன் இறைவா கச்சி ஏகம்பனே!

மாயை என்று உணராமல் எதிரில் வரும் காதல் மடமாதரை பல்விதமாகக் கொஞ்சி மகிழ்ந்து வந்ததைத் தவிர, அது எமன் நமக்கு அனுப்பியுள்ள தூது என்பதை நினைத்துப் பார்க்காமல் இதுவே சுகம் என்று கண்டதே காட்சியாய், கொண்டதே கோலமாய் வாழ்ந்த இந்த அறியாமையை என்னவென்று சொல்வேன் இறைவா கச்சி ஏகம்பனே!

ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல, பிள்ளைகளும்
சீரும் சதமல்ல, செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றாள் சதம் கச்சி ஏகம்பனே!

வாழும் இந்த ஊர், சொந்தம் கொண்டாடுகின்ற உற்றார் உறவினர், கடினமாக உழைத்து வாங்கிய நற்பெயர், மனைவி மக்கள், ஞானம், செல்வம் இவை எதுவும் நிரந்தரமானதல்ல. நம்மைச் சுற்றி வாழுகின்ற எதுவும் எவரும் நிரந்தரமானவர்கள் அல்ல. உன்னுடைய இரு தாமரைப் பாதங்கள் மட்டுமே நிரந்தரம் கச்சி ஏகம்பனே.

பொருள் உடையோரைச் செயலினும், வீரரைப்
போர்க்களத்தும்,
தெருள் உடையோரை முகத்தினும், தேர்ந்து தெளிவது
போல்
அருள் உடையோரைத் தவத்தில் குணத்தில் அருளில்
அன்பில்
இருள் அறு சொல்லினும் காணத்தகும் கச்சி ஏகம்பனே!

செல்வந்தனாக இருந்தால் அவனுடைய நற்செயல்களாலும், வீரனாக இருந்தால் போர்க்களத்திலும், நல்ல தெளிந்த ஞானமுடையவனாக இருந்தால் அவனுடைய முகத்திலும், பார்த்துத் தெரிந்து கொள்ள முடிவது போல, இறைவன் அருள் பெற்றவர்களை அவர்களுடைய தவத்திலும், குணத்திலும், அருளிலும், அன்பிலும், வஞ்சகமில்லா சொல்லிலும் பார்க்க முடியும் கச்சி ஏகம்பனே.

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார்,
வழக்குரைப்பார்
தீதுக்கு உதவியும் செய்திடுவார், தினம் தேடி ஒன்று
மாதுக்கு அளித்து மயங்கிடுவார், வீதி மாளும் மட்டும்
ஏதுக்கு இவர் பிறந்தார் இறைவா கச்சி ஏகம்பனே!

சதா ஊர் சண்டை, தெருச்சண்டை போடுவதோடு, மற்றவர்களைப் பற்றி குறைசொல்லிக் கொண்டிருப்பது, தீமையான காரியங்களுக்குத் துணை போவது, தினம் உழைத்த பொருளை இன்ப போகத்துக்குச் செலவிடுவது இவையெல்லாம் உயிர்

உள்ள காலம் வரை செய்து கொண்டிருப்பவர்கள் எதற்காகப் பிறந்தாரோ தெரியவில்லையே இறைவா கச்சி ஏகம்பனே!

ஓயாமல் பொய்சொல்வார் நல்லோரை நிந்திப்பார்
உற்றுப்பெற்ற
தாயாரை வைவார் சதி ஆயிரம் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்கு உபகாரம் செய்யார் தமை அண்டினோர்க்கு
ஒன்றும்
ஈயார் இருந்தென்ன போயென்ன காண் கச்சி ஏகம்பனே!

விழித்திருக்கும் நேரமெல்லாம் பொய் ஒன்றே உயிர் மூச்சாய் சொல்லிடுவர். நல்லவர்களைப் பொழுதுக்கும் தூற்றிக் கொண்டிருப்பர் சுமந்து பெற்ற தாயாரைத் திட்டிக் கொண்டிருப்பர். சூதும் வாதும் ஆயிரக்கணக்காய் செய்து கொண்டிருப்பர். எந்த உயர்ந்த சாத்திரங்களையும் கற்று உணராதிருப்பர். பிறருக்குத் தேவைப்படும் போதும் ஆபத்துக் காலத்திலும் ஓடிப்போய் உதவாதவர், நம்மையே அண்டி நிற்போருக்கு எதையும் கொடுக்காத கஞ்சனாக இருப்பர். இவர்கள் உயிரோடு இருந்தால் என்ன போய்ச்சேர்ந்தால் என்ன கச்சி ஏகம்பனே!

நாயாய் பிறந்திடில் நல்வேட்டையாடி நயம்புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்து பின் சம்பன்னராய்க்
காயா மரமும், வறளாங் குளமும், கல்லாவும் அன்ன
ஈயா மனிதரை ஏன் படைத்தாய் கச்சி ஏகம்பனே!

நாய் ஜென்மமாகப் பிறந்திருந்தாலும் வேட்டைக்குச் சென்றிருக்கலாம் தாயார் வயிற்றில் பத்து மாதங்கள் குடியிருந்து பிள்ளையென்று பிறந்து, வாழ்க்கை முழுவதும் காய்க்காத மரத்தைப் போலவும், வறண்டு போன குளத்தைப் போலவும், அசையாத பாறை போலவும் இருக்கின்ற கஞ்ச மகா பிரபுக்களை ஏன் படைத்தாய் கச்சி ஏகம்பநாதனே!

பிற்சேர்க்கை - 3

பட்டினத்தார் - உடற் கூறு வண்ணம்

ஒரு மட மாதும் ஒருவனும் ஆகி
இன்ப சுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதுமரரும்பு கமடம் இதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர் வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரமகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து
ஒளிநகை ஊறல் இதழ் மடவாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வா இரு போ என நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவினிலிருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரடோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குரு உபதேசம்
முத்தமிழின் கலையும் கரை கண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ் பதினாறு பிராயமும் வந்து

மதனசொரூபன் இவன் என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர் பிறகோடி
தேடிய மாமுதல் சேர வழங்கி
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திருகண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கையில் ஓர் தடியும் ஆகியே
வருவது போவது ஒருமுதுகூனும்
மந்தி எனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாய் அறியாமல் விடாமல் மொழிந்து
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
கடன்முறை பேசும் என உரைநாவும்
உறங்கிவிழுந்து கைகொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே
வளைபிறை போல எயிரும் உரோமம்
முன்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல் யமதூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலமறிந்து
வரிசை கெடாமல் எடும் எனஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து

கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடமூடி அழல் கொடுபோட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே

- பட்டினத்தார்

மரணம் ஒரு ஆனந்தம்!

நாம் இறந்த அடுத்த நொடியே நம்முடைய உயிர் ஆத்மாவாக மாறி

வெளியே நின்றபடி நம்மை வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடும்.

கொஞ்ச நேரத்தில் எப்படியாவது நாம் இறந்த செய்தி நம் வீட்டுக்கு போய்விடும்.

எல்லோரும் கதறியழுது காத்திருப்பார்கள்.

நம்மை வேடிக்கை பார்க்க ஊரே திரண்டு நிற்கும்.

உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உடனே தகவல் சென்றுவிடும்.

இவ்வளவு நாள் நேராக வீட்டுக்குள் சென்ற நம்மை இன்று வாசலிலேயே வைத்துவிடுவார்கள்.

இத்தனைக்கும் அந்த வீட்டை நாம்தான் பார்த்து பார்த்து கட்டியிருப்போம்.

எல்லாம் நேரம்!

ஆளுக்கொரு பக்கம் மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அழுவார்கள். வருகின்ற நண்பர்களையும் உறவினர்களையும்கூட கட்டிக் கொண்டு அழுவார்கள். நமக்கு ஒன்றுமே புரியாது.

அவர்கள் அழுவதை பார்த்து கஷ்டமாக இருந்தாலும் உள்ளுக்குள் சந்தோஷமாக இருக்கும். நம்மீது இவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்களே என்று!

உங்களைவிட்டு எங்கும் போகமாட்டேன் எப்போதும் உங்களுடன் இருப்பேன் என்று ஆறுதல் சொல்லி கண்ணீரை துடைக்கவேண்டும் என்று துடியாய் துடிப்போம்.

ஆனால் எதுவுமே முடியாது. அதுதான் மரணத்தின் மிக மோசமான துயரம்!

ஆனால் நம்மால் தான் உணரமுடியாது. ஒருவழியாக உள்ளே தள்ளி அடைத்து விட்டார்கள், இருட்டிக்கொண்டதால் வெளியே உயரிகசைந ம் போட்டு விட்டார்கள்.

அழுதுகொண்டே ஓடிவருகிறார்கள். இவ்வளவு நேரத்திற்கு பிறகு தமிழில் நமக்கு பிடிக்காத அந்த வார்த்தையை ஒருவன் சொன்னான். 'பொணத்தை' கொஞ்சம் தள்ளி வைங்க பந்தல்போடணும்.

நம்ம அப்பா எவ்வளவு அழகாக பெயர் வைத்திருந்தாலும் செத்தபின்னாடி பத்துகாசுக்கு தேறாது!

கூட்டம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. நம் பகையாளிகள் கூட நம்மை ரொம்ப நல்லவன் என்று நற்சான்றிதழ் தருகிறார்கள்.

ஒருபக்கம் தாரை தப்பட்டை இன்னொரு பக்கம் மக்கள் வெள்ளத்தில் மாலை மரியாதைகள். இன்னொரு பக்கம் பட்டாசுசத்தம். எல்லாம் இருந்தும் என்ன பிரயோஜனம்?

அத்தனைபேரு முன்னாடி அரைகுறை ஆடைகளோடு நம்மை குளிக்க வைத்து மானத்தை வாங்கிட்டாங்களே! என்ன பண்றது?

பொணமா பொறந்தாலே இப்படிதான்!

ஒருவழியாக எரிப்பதற்கோ புதைப்பதற்கோ எடுத்துசெல்கிறார்கள்

இவ்வளவு நாள் நாம் போட்ட ஆட்டத்தையெல்லாம் சேர்த்து நாலுபேர் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள்! கடைசியில் நம்மை எரித்தேவிட்டார்கள்!

இனி எங்காவது நாய் ஊளையிட்டால் கூட நாம்தான் வந்திருக்கிறோம் என்று புளுக ஆரம்பித்துவிடுவார்கள்!

அடுத்த நாள் வீட்டுக்கு சென்று பார்த்தால்அழுகை குறைந்து விசும்பலாகி விட்டிருக்கும் அதற்கு அடுத்த நாள் விசும்பலும் குறைந்திருக்கும்.

இப்படி நாளாக நாளாக நம்மை கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவிடுவார்கள்!

ஒவ்வொரு இறப்பின் போதும் எத்தனையோ கனவுகளும், ஆசைகளும்

சேர்ந்தே புதைந்து போகின்றன!

இப்படி ஒவ்வொரு நாளும் சராசரியாக உலகம் முழுவதும்

70,000 பேர் உயிர்துறக்கிறார்கள்!

நாளைய விடியல் நமக்கானது என்கின்ற எந்த உத்திரவாதமும் இல்லாதபோது, நாம் ஏன் பொய்யோடும், பொறாமையோடும், பகையோடும், பாவத்தோடும் நம் வாழ்க்கையை வாழவேண்டும்?

கருத்து

ஓம் நமசி வாய சிவாய நமஓம்
சிவாய நம ஓம், நமசிவாய நம ஓம்
சிவ சிவ சிவாய சிவாய நமஓம்